Tillai is unknown to the Śangam literature. Argument from silence is not always safe. But this much we can say that it was not a place of importance in the Śangam age. The only importance Coḷa King of the Śangam age that is mentioned in connection with Chidambaram is Kochcheṇgaṇan of the late Śangam period. His connection with Chidambaram is not mentioned in the contemporary works about him—*Puranānūru, Naṟṟiṇai* and *Kaḷavaḷi*. While the *Kalingattupparaṇi* places him before Karikāla, the *Ulās* place him after. It is only Nambiyāṇḍār Nambi and Śekkiḷār (11th and 12th centuries) that mention his connection with Chidambaram. Śekkiḷār says that Subhadevar the father of Kochcheṇgaṇan and his consort Kamalvati worshipped the Lord of Tillai and a son was born to them in answer to their prayers, that his birth was forcibly delayed to await the auspicious hour, that after he became king, he built many temples to Śiva and many mansions for the learned 3000 brahmins of Tillai where resided the Lord of Dance. This late testimony of Śekkiḷār and the absence of contemporary evidence on this question should make us hesitate, for purposes of history, to accept the alleged connection of Kochcheṇgaṇan with Chidambaram. We do not know

The following notes in the Supplement to the South Arcot Gazetteer are of no value: "A Hiraṇyavarman was the father of Nandivarman Pallavamalla and the temple, if this identification is correct, must have been built in the 8th century A.D. But the temple is referred to in the Devāram which takes us to the 7th and earlier centuries. Temples (at that time not stone structures) must have existed even in Pre-Pallava period according to the evidence of Śangam literature for Śengaṇan Coḷa is said to have built 70 Śiva temples. Chidambaram temple existed in the 8th century; but it must have assumed a new form in the last century of the Pallava rule, and been very much strengthened and improved during the times of the later Colas." The identification of the Simhavarman of the legends with Hiraṇyavarman father of Nandivarman II is wrong. It has been admitted that the temple existed much earlier than the 8th century A.D. the period of Nandivarman II and his father. There is no evidence that the Chidambaram temple was one of the 70 Śiva temples alleged to have been built by Śengaṇan. The Śiva temples at Nannilam, Ambar, Vaikal, and the Viṣṇu shrine in the Chandra mauliśvara temple at Tiruvakkarai are clearly referred to as having been built by this Coḷa King. Tirumangai's Tirunaṟiur hymn refers to the building of the 7^ Śiva temples by Kochcheṇgaṇan.

even whether Chidambaram was or was not one of the 70 Śiva temples said to have been built by this almost last great Coḷa King of the Śangam age.

(*a*) நம்பியாண்டார் நம்பி — திருத்தொண்டர் திருவந்தாதி.

"செம்பொ னணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுத லென்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை யீசனைச் சூழ மறைவளர்த்தா
னிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணானெனு நித்தனையே."

(*b*) சேக்கிழார் — பெரிய புராணம்.

"தொன்மைதரு சோழர்குலத் தரசனாஞ் சுபதேவன்
றன்னுடைய பெருந்தேவி கமலவதி யுடன் சார்ந்து
மன்னுபுகழ்த் திருத்தில்லை மன்றாடு மலர்பாதஞ்
சென்னியுறப் பணிந்தேத்தித் திருப்படிக்கீழ் வழிபடுநாள்.
மக்கட்பே ரின்மையினான் மாதேவி வரம்வேண்டச்
செக்கர்நெடுஞ் சடைக்கூத்தர் திருவுள்ளஞ் செய்தலினால்
மிக்கதிருப் பணிசெய்த சிலம்பிகுல வேந்துமகி
ழக்கமல வதிவயிற்றி னணிமகவாய் வந்தடைய.

... ...

திருவார்ந்த செம்பொன்னி னம்பலதே நடஞ்செய்யும்
பெருமானை யடிவணங்கிப் பேரன்பு தலைசிறப்ப
வுருகாநின் றுளங்களிப்பத் தொழுதேத்தி யுறையுநாள்
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பலசமைத்தார்."

But even supposing we could accept this late testimony as valid, we have to ascribe it to the end of the 3rd or the 4th century A.D. which must be taken as the outer limit for the Śangam age; and there is nothing improbable in this allowing a period of 2nd or 3rd centuries for Chidambaram to develop till we reach the age of Sambandar who can definitely be placed in the early 7th century A.D. Between Koch-cheṅgaṇan and Parāntaka I the *Kulottunga śoḷan Ulā* places a certain Coḷa king who is said to have established himself (literally seen) at Tillai after splitting through the chest of Brahmavarka. The story is too brief to be of any value for purposes of historical investigation.

"..........................வேறு
பரம வரக்க னகலம் பிளந்து
பரமர் திருத்தில்லை பார்த்தோன்."

Achyuta's rule at Tillai

One of the post-Śangam works but closely near to them in time is the *Maṇimekhalai* by Sāttanār. This work introduces an atmosphere of the predominance of Buddhism in the Tamil Land. Curiously this coincides with a dark period in South Indian history often associated with an historical phenomen known as the *Kaḷabhra Interregnum.* Many theories have been propounded about the origin of the Kaḷabhras but none is satisfactory. It is enough to state that they played an important role in South India before the middle of the 6th century A.D. and as a consequence of their aggression, the Coḷa, Pāṇḍya and Chera rulers were for a time under eclipse. Both Simhaviṣṇu of the revived Pallava power of Kāñchi and Kaduñgōn, the founder of the first empire of the Pāṇḍyas, established their political ascendency on the ruins of the Kaḷabrahs. One of these kings, Achyuta Kaḷappaḷan is connected with Chidambaram. Tillai was his capital and he is said to have kept in prison in the palace at Tillai, the three Tamil Kings Chera, Coḷa and Pāṇḍya. There are five stanzas in the *Tamil nāvalar charitai* which describe the songs sung by the Tamil Kings while in prison at Tillai.

அச்சுத களப்பாளன் தளையிட்டபோது மூவேந்தர் பாடியவை.

(சேரன்)

திணைவிளைத்தார் முற்றந் திணையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானும்—கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன்முற் றத்து.

(சோழன்)

அரசர் குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்தாள் — முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்.

(பாண்டியன்)

குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராமன்
நிறையறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை.

"இது பாடியபின்பு ஒரு விலங்கு கூடப்போட்டபின் பாண்டியன் பாடியது"

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றார்த்தார் — வடகடலர்
தென்கட லென் றார்த்தார் தில்லை யச்சு தானந்தன்
முன் கடைநின் றார்க்கு முரசு.

களம்பாளன் வெற்றிச் சிறப்பு.

படுபெருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்கு நாயும்
கொடியுங் கழுகுமிவை கூடி — வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

A Buddhist writer called Buddhadhatta is said to have composed his work when *Achyuta Vikanṭa* of the *Kaḷabrah kula* was ruling the earth. It is very likely that this Achyuta Vikanṭa of Buddhadhatta is identical with *Achyuta kaḷappaḷan* of the *Nāvalar Charītai.* Buddhism seems to have been predominant in the 4th and 5th century A.D. And *Achyuta* is regarded as a great patron of Buddhism in this part of the Tamil country, and Ceylon, we learn, was the land of inspiration for the South Indian Buddhists of this age.

Māṇikkavāśagar

Māṇikkavāśagar who is credited with the overthrow of the Buddhists from Ceylon in a religious disputation at Chidambaram may well be ascribed to the period when the Kaḷabrahs were on the decline. Māṇikkavāśagar is the author of two works—*Tirukkovaiyār* and *Tiruvāśagam.* The Tirukkovaiyār is a subjective poem—in *Ahapporuḷ*—on the Lord of Tillai. In this we find a stanza which refers to the position of the twin Gods Śiva and Viṣṇu thus: "He (Viṣṇu) who tried in vain by splitting open the earth in order the see the two feet of Him who destroyed the Tripura, begged of Śiva with extended hands to show them out of mercy for worship. Then the Lord moved somewhat showed Viṣṇu one of his legs. Thereupon Viṣṇu lay prostrate in the Hall of Tillai in order that his prayers to see the other leg might be granted

"புரங்கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கி டெந்தாயென்றி ரப்பத்தன்னீ ரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தா னொன்றுகாட்ட மற்றாங்கதுங் காட்டிடென்று
வரங் கிடந்தான் றில்லையம்பல முன்றிலம் மாயவனே."

This is only the poetic fancy of a Śaivite poet that the two Lords of the Trinity dwelt together in the hall of Tillai.

The other poem—Tiruvāśagam—is the best form of devotional songs of the Tamil Land and is the solace of a soul struggling for spiritual realisation. His last days were spent here and he attained the Lord's grace during the *Ārudhrā* of *Mārgaḷi* and even now his idol is taken round in procession during the *Ārudhrā* festival and his *Tiruvembāvai* hymns are sung during the ten days of the festival. Māṇikkavāśagar also refers to this place as Ponnambalam.[4]

Tirumūlar and Nandanār:—

The canonisation of Tirumūlar and Nandanār should be ascribed to the period prior to the 7th century A.D. Tirumūlar is believed to be the earliest apostle of Śaivism in the Tamil Land. He is a mystic yogin. He is assigned a period ranging from the 1st to the 9th century A.D. but we may place him before Appar.

So also is Nandanār, the Ādi-dravida saint of Ādanūr in Mērkānāḍu. He conceived a dying devotion to see the Lord of Tillai. Ever since he saw the vision of the Lord in a dream, he told himself to go to Tillai the nextday. Hence he was called *Nāḷaippōvān*. Unable to get permission from his brahmin master, he postponed his journey from day to day. Finally fulfilling the conditions imposed by his master by a miracle wrought on his behalf by God, he reached Tillai. There after purification through the homa fire, he was admitted to the holy of holies and thus he attained salvaion. The account of his life in the *Periya purāṇam* is meagre but the master-piece of *Nandanār's kīrtanai* by Gopalakrishna Bharati has made his name a household word in the South India. The expression "வித்தின்றி நாறு செய்வானும்" of Appar may refer to Nandanār, and Sundaramūrti refers to him as Nāḷaippōvān—'He who would go (To Tillai) next day'—in his Tiruppungūr hymn.

சுந்தரமூர்த்தி — தேவாரம்

"நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் நாவினுக்கரையன் நாளைப் போவானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்கொள்கை கண்டுநின்
குரைகழல டைந்தேன்
பொற்றிரள் மனதிக் கமலங்கள் மலரும் பொய்கைசூழ் திருப்புன்
கூருளானே."

---

4 Māṇikkavāśagar's date:—Kerala society papers (series 5) alleged conversion of Christians to Hinduism (314 A.D.); The Pāṇḍyan Kingdom pp. 65–67; K. S. Srinivasa Pillai Tamil varalāru II, pp. 76–125. This saint is placed after Sundara; C. V. Narayana Aiyar Śaivism in South India, pp. 398 ff. M.'s date 660–692 A.D.

பெருங்கதை—ஓர் ஆராய்ச்சி

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்

பெருங்கதை வத்ச தேசத்து உதயணனுடைய கதையைக் கூறுங் காவியம். அவனுடைய கதை இந்தியாவிலே 2,000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே வழங்கத் தலைப்பட்ட கதை. குணாத்தியர் பைசாச மொழியிற் செய்த "பிரஹத்கதா" என்பதில் அக் கதையைக் கூறினர். பாசகவி அக் கதையின் சில பகுதிகளை "ஸ்வப்ன வாசவதத்தை," "பிரதிஞ்ஞா யௌகந்தராயணன்" என்ற சமஸ்கிருத நாடகங்களாக எழுதியுள்ளார். காளிதாசர் உதயணன் கதையை அறிந்தவர் என்பது அவரியற்றிய "மேக சந்தேசப்" பகுதியால் விளங்குகிறது. அவர் இயற்றிய "மேக சந்தேசத்"தில் "மேகமே, உதயணனது சரித்திரத்தைச் சொல்வதில் திறமை மிக்க முதியவர் வாழும் அவந்தி தேசத்தை அடைவாய்" என்று கூறியதிலிருந்து இது புலனாகும். மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில் உதயணன் தோழனாகிய யூகியின் ஒரு செய்தி உவமையாக ஆளப்பட்டிருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுபந்து என்பார் "வாசவதத்தை" என ஒரு நாடகம் இயற்றியதும் உதயணன் கதையைப் பற்றியே யாகும். ஹர்ஷ ராஜனால் இயற்றப்பட்ட "ரத்னாவளி" என்னும் சமஸ்கிருத நாடகமும் இக்கதையொடு தொடர்புடையது. உதயணன் கதை கேரள நாட்டிலே தச்சோளி ஒதயணனைப் பற்றிய நாட்டுப் பாடலாக வழங்குகிறது. மலையாள தேசத்திற் சாக்கையர் அவன் கதையைக் கூத்தாக நடித்துக் காட்டுகிறார்கள். இந்தக் கதையைத் தமிழிற் "கொங்குவேள்" என்பார் காவியமாக இயற்றினார். அதுவே பெருங்கதை, மாக்கதை என்று சொல்லப்படும்.

உதயணன் வத்ச தேசத்தை யாண்ட மன்னன்; சதானிகனுக்குப் புதல்வன். அவன் தாயார் கருவுற்று முதிர்ந்த நாளில் நிலா முற்றத்தில் தூங்கிக்கொண்டிருந்தவளைச் சிம்புட்பறவை யென்னும் எட்டுக்காற் பறவை ஒன்று வெறுந் தசைப்பிண்டம் என்று எண்ணிக் கட்டிலொடு தூக்கிக் கொண்டுபோய் ஒரு மலையில் வைத்ததாம். அவள் விழித்துக் கொள்ளவே ஓடிவிட்டதாம். பிறகு அங்கே விடியற்கால நேரத்தில் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே உதயணன் என்று பெயரிடப்பட்டான்.

உதயணன், யூகி என்ற சிறந்த தோழனைப் பெற்றான். வில்வித்தையிலும் யாழ்வித்தையிலும் சிறந்தவனாயினான். அவன் யாழிசையில் மயங்கி

ஒரு தெய்வயானை அவன் வசத்ததாயிற்று. பிறகு, தனது தந்தையின் அரச செல்வத்தைப் பெற்று நுகருநாளில் ஒரு நாள் தெய்வயானைக்கு முதலிற் கொடாமல் தான் உண்டான். அந்த யானை அவன் அப்படிச் செய்யும் நாளில் அவனை விட்டு நீங்கிவிடலாமென்று முன்னரே இசைவு பெற்றிருந்தது. ஆதலால், உடனே அந்த யானை மாயமாய் நீங்கிவிட்டது. அதனிடத்து வைத்த அன்பினால், அவ்யானையைத் தேடிக்கொண்டு உதயணன் பலகாலம் திரிந்தான். இதை அறிந்த அவன் பகைவன் பிரச்சோதனன் மாசேனன் என்பான் உஞ்சையை ஆண்டு வருபவன் எந்திர யானை யொன்று செய்வித்துக் காட்டிற்கு அனுப்பினான். உதயணன் அவ்யானையின் அருகில் தனது யாழொடு வர, உள்ளிருந்த எண்பது வீரர் குதித்து அவனைச் சிறைப்படுத்தினர். கேட்ட யூகி, உதயணனை விடுவித்து மாசேனன் மகளைக் கவர்ந்து வருமாறு செய்வதாகச் சபதஞ் செய்தான்.

உதயணன் சிறையிலிருக்குங்கால், மகாசேனனது பட்டத்து யானை நளகிரி யென்பது மதவெறி கொண்டு மக்களை அலைக்கத் தலைப்பட்டது. வேறு வழி அறிந்திலா மகாசேனன், உதயணன் உதவியை நாடினான். உதயணன் அவ் யானையை அடக்கித் திரும்புங்கால், மகாசேனன் அரண்மனைப் புலிமுகமாடத்திலிருந்து யானையைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு விடைபகர உதயணன் தலைநிமிர்ந்தான். மாடத்தில் இருந்த அரசன் மகள் வாசவதத்தையைக் கண்ணுற்றான். அவளுங் கண்டாள். இருவருங் காதல் கொண்டார். அவளுக்கு யாழாசிரியனாகவும் அவள் சகோதரர்க்கு வில்லாசிரியனாகவும் நியமிக்கப்பட்ட உதயணன் அவர்களை அவ்வத்திறத்துப் பயிற்றினான். மகிழ்ந்த மகாசேனன், தன் புதல்வர் தலைமையில் பெரிய படையொடு உதயணனை வத்ச தேசத்திற்கு அனுப்பவும், இடையே பாஞ்சால மன்னன் ஆருணி யென்பானாற் கவர்ந்து கொள்ளப்பட்ட நாட்டை மீட்டும் பெறுமாறு உதவவும் நினைத்தான். இதற்கிடையே யூகியின் சூழ்ச்சியால் ஊரிலே நீராட்டுத் திருநாள் கொண்டாடப்படுவதாயிற்று. வாசவதத்தை சிப்రா நதியில் நீராடிக் கொண்டிருக்குங்காலை, யூகி செய்திருந்த சூழ்ச்சியின்படி பல வீடுகள் தீக்கு இரையாயின. மேக முழக்கத்தைக் கேட்டு யானைகள் வரம்புகடந்து ஓடி மக்கட்குச் சேதம் விளைத்தன. நளகிரி யென்னும் பட்டத்து யானை மீண்டும் மதவெறி கொள்வதாயிற்று. ஊரார் எல்லாம் அஞ்சுகின்ற நேரத்தில், மன்னன் மகாசேனன் தன் மகளைக் காப்பது உதயணன் கடன் என்று சொல்லியனுப்பினான். நீராடிக்கொண்டிருந்த வாசவதத்தையை உதயணனும் தான் ஏறியிருந்த பத்திராபதி என்னும் சிறந்ததோர் யானைமீது ஏற்றிக்கொண்டு வேகமாக வெளியேறினான். பிறகு, சயந்தி நகரத்தில் அவளை மணந்து இன்பந்துய்ப்பான் ஆனான்.

வாசவதத்தையினிடத்துத் தான் வைத்த காதலுக்கு அளவின்றிப் பிறிதொன்றையுங் கவனியாது, இழந்த நாட்டைப் பெற வேண்டுமே என்னும் எண்ணமும் கொள்ளாது, உதயணன் வாழ்ந்து வருவதை அறிந்த யூகியின் சூழ்ச்சியால், உதயணன் வாசவதத்தையைப் பிரிய நேரிடுகிறது. வாசவதத்தை தீக்கிரையாயினுள் என்று எண்ணப்பட்டவளை உயிர்ப்பித்துப் பெறும் நோக்கத்தோடு, உதயணன் இராசகிரிய நகரத்துப் பெரியவர் ஒருவரை நாடிப் போகிறுன். வழியில் ஒரு சோலையில், பதுமாபதி யென்பாளைக் கண்டு கலங்குகிறுன். அவள் அந்நகரத்து அரசனுடைய சிறிய தாயின் மகள். வசந்த விழாவிற் காமனைச் சேவிக்க அவ்வழியே வருகிறுள். அவளுடைய தேர் காமன் கோயிலிடத்தே நின்றதும், தேரில் உள்ள திரை காற்றுல் விலகவே, இருவருங்கண்டு காதலில் மூழ்குகிறுர்கள். அவளுடைய தமையன்முன் எதிர்த்துவந்த பல அரசரையும் உதயணன் குதிரைவணிகன் உருக்கொண்டு அடுத்துக் கெடுத்து அழிக்கின்றுன். நன்றி பாராட்டி அரசன் பதுமாபதியை உதயணனுக்கு மணம் செய்விக்கிறுன்.

பிறகு, உதயணன் தனது தேசத்தை மீட்டும் பெற்று ஆண்டு வரும் நாளில், இழந்த வாசவதத்தையைக் கருதிக் கருதிக் கனவிலும் நனவிலும் நைகின்றுன். கனுக்காணும் வேளையில், இறந்து போனதாகக் கருதப்பட்ட வாசவதத்தை அவ்விடம் வந்து அவன் நிலையை அறிகிறுள். பின், வாசவதத்தையும் பதுமாபதியும் ஒத்தமனமுடைய மனைவியராய் இருந்து வருகிறுர்கள்.

ஒருநாள், வாசவதத்தையும் பதுமாபதியும் தோழிகளுடன் பந்தாடுவதைக்காண உதயணன் பெண்ணுருக்கொண்டு ஒரு பிடிமீது இருக்கிறுன். அவ்வேளை, ஆங்கே அருமையான வகையில், பந்தாடிய மானனீகை என்னுங் கன்னியிடத்து உள்ளத்தைக் கொள்ளை கொடுக்கிறுன். உதயணனும் மானனீகையும் தம் உள்ளக்கருத்துக்களை வாசவதத்தைக்கு ஒப்பனை செய்வதாகத் தலைக்கீடு வைத்துத்தீட்டிய யவனமொழி எழுத்துக்களால் ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொள்கின்றனர். மானனீகை முதலில் இணங்கவில்லை எனினும், மன்னன் மாள்வதாகக் கூறியதற்கு அஞ்சி, அவனுக்கு இன்பந்தர முடிவு செய்துகொள்கிறுள். அவ்விருவரிடையே நிகழுங் களவினைச்சூழ்ந்து அறிந்து கொண்ட வாசவதத்தை மானனீகையைக் காவலில் வைத்துவிட்டு அவள் வந்துகூடும் குறியிடத்தைச் சார்ந்து இருப்ப, உதயணன் வர, ஊடலுடையாள் போல வாசவதத்தை நடிக்க, இறுதியில் அங்ஙனம் வந்திருப்பவள் மானனீகையல்லள், வாசவதத்தையே என்பது வெளியாகிறது. மானனீகையின் கூந்தலைக் கத்தரிகையால் அரிய வேண்டும் என்று அரசியிட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் வயந்தகன்

யூகி யென்னும் இருபேரமைச்சரும் காலந் தாழ்த்துக்கொண்டும், பதுமாபதி தடைசெய்து கொண்டும் இருக்கும் நேரத்தில், மானனீகை வாசவதத்தையின் தங்கை யென்பது வெளியாகிறது. உடனே அவளை விடுவித்து, மன்னிக்குமாறு வேண்டுகிருள் வாசவதத்தை. வாசவதத்தை குறுக்கிட்டுத் தடுக்க முயன்ருள் எனினும், மானனீகை தனது தங்கை யென்ற செய்தியைத் திடீரென்று அறிந்தவுடன், அவளை உதயணன் மணந்து கொள்ள இசைவு செப்புகிருள். எனவே, வாசவதத்தையும் பதுமாபதியும் அளிப்ப, மானனீகையை உதயணன் கைப்பிடித்துக் கொள்கிருன்.

முன்னெரு நாள், உதயணனும் வாசவதத்தையும் ஒரு காட்டில் தங்கியிருந்த காலத்தில், வாசவதத்தை சோலையில் மலர் கொய்யப் போயிருந்த வேளையில், தந்தை யன்றி வேறு ஆடவர் எவரையுங் கண்டறியாத விரிசிகை என்னும் ஒரு பெண், துறந்து தவஞ் செய்துகொண்டிருந்த மந்தரவரசன் என்பான் புதல்வி, அவனைக் கண்டதும் காமனேயென்று கலங்கிக் காதல் கொண்டுவிட்டாள். அவள் அவனை யன்றி எவரையும் நினையாது அவன் அன்றளித்த கண்ணியையும் மாலையையுமே சூடி அவனையே அடைய விழைந்தாளாக, பல்லாண்டு கழித்து அவளைத் தந்தை கொண்டுவந்து உதயணனிடஞ் சேர்ப்பிக்க, அவனும் வாசவதத்தையின் இசைவொடு அவளையும் மணந்தான்.

பிறகு, வாசவதத்தையிடம் பிறந்த நரவாணன் என்பான் வித்தியாதர உலகிற் பேரரசனுனமையும், பதுமாபதியிடம் பிறந்த கோமுகன் என்பானுக்கு அரசினை நல்கி உதயணன் துறவு பூண்டமையும் இக்கதையை யொட்டி யறியப்படுஞ் செய்திகள்.

பெருங்கதை சமஸ்கிருத காவியம் ஒன்றினின்று மொழிபெயர்க்கப் பட்டதாகக் கூறப்படும். குணுத்தியர் என்பார் பைசாச மொழியிலே பிரகத்கதா என்ற புத்தகம் எழுதினுராக, துர்விநீதன் என்ற ஓர் அரசன் அதை வடமொழியில் எழுதினுன் என்பார்கள். அந்த வடமொழி நூலே பெருங்கதைக்கு முதனூலாய் அமைந்தது என்ப. குணுத்தியர் இயற்றிய பனுவலிலிருந்து பாசகவி வடமொழியில் சுவப்பனவாசவதத்தை, பிரதிஞ்ஞை யௌகந்தராயணன் என்ற நாடகங்களை எழுதினுரேனும், பாசகவியின் புத்தகத்தைப் பார்த்துத் தமிழ்ப் பெருங்கதை எழுதப்பட்டதன்று எனத் துணியலாம். இவற்றினிடையே கதை நிகழ்ச்சியிலே பல வேறுபாடுகள் உண்டு.

பாசகவி நாடகத்தின்படி, உதயணன் சிறைப்பட்டிருந்தவன் சிறையில் இருக்குங்காலை, அவ்வழியே இயக்கியை வழிபடச் சென்ற வாசவதத்தை ஊர்ந்த சிவிகையைச் சுமப்போர் சிறைக்கு எதிரே

தோள்மாற்றும் வேளையிற் கண்டு கலங்கினன். பெருங்கதையில், இருவருங் கண்டு காதல் கொண்டார்கள் என்பதும், கண்டது சிறையின் வெளியே உதயணன் யானையை வீணையால் அடக்கிய பிறகு என்பதும் கூறப்பட்டிருக்கின்றன. வாசவதத்தை உதயணன் ஆகிய இருவருடைய படத்திற்கே அவர் வெளியேறிய பிறகு மகாசேனன் மணம்புரிந்து வைத்ததாகச் சமஸ்கிருத நாடகம் கூறும். தமிழ்க் காவியத்தில், அரண்மனையிலன்றி வெளியே வேற்றிடத்தில் மணமக்களுக்கே மணம் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும்.

பாசகவி நாடகத்தின்படி, வாசவதத்தை பதுமாபதியிடம் யூகியால் அடைக்கலம் எனத் தரப்பட்டு இருந்து வருகிறாள். கொங்குவேள் மாக்கதையில், வாசவதத்தை யாப்பியாயினி எனுஞ் செவிலியோடு யூகியின் ஆதரவிலே இருந்து வருகிறாள். பதுமாபதியின் திருமணத்திற்கு வேண்டிய மாலையைக் கட்டும் பணி வாசவதத்தைக்கே நேர்ந்ததாக வடமொழி நூல் சொல்லும். அங்ஙனம், தமிழிற் சொல்லப்படவில்லை.

உதயணன் ஒரு பணியின்மேல் வந்திருந்தபோது அவனிசைவு பெற்றுப் பதுமாபதியை உதயணனுக்குக் கொடுக்க அவள் தந்தை உறுதி செய்வதாக வடமொழி நாடகங்கூறும். அவ்விருவரையும் முன் கண்டவராகக் காட்டவில்லை அந்நாடகம். ஆனால், பெருங்கதைப்படி, அவ்விருவரும் முன்னரே கண்டு நெஞ்சமும் மெய்யுங் கலந்த அன்பினர். கண்ணியும் தழையும் உதயணன் கொடுப்ப, மோதிரமும் மாலையும் பதுமாபதி கொடுப்ப இருவரும் உள்ளுறு புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் மணத்தின் முன்னரே பெற்றவர். மேலும், பதுமாபதி தலைநோயென்று படுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட இடத்தில், அவளைக் காணவந்த உதயணன் காணாது மஞ்சத்திற் படுத்து உறங்கினனாக, ஆண்டே அவளுக்கு உறு துணையாக வரும் வாசவதத்தை அவன் கனவில் தன்னைப்பற்றிக் கவல்வதை அறிவதாக வடமொழி நாடகம் வரைந்துளது. தமிழ்க் காவியத்திலோ, வசந்தகன் கூறியாங்குப் பதுமாபதியைப் பிரிந்து தனியிடத்தில் தூய உளத்தனாய் உதயணன் வதியுநாளில், யூகியொடு திரும்பி மன்னனைச்சேரும் எண்ணமுடையவளாய் வந்திருக்கும் வாசவதத்தை ஓரிரவில் அவன் உள நிலையைக் கண்டறிந்து போவதாகக் காட்டப்பட்டிருக்கிறாள். உதயணனுடைய மற்ற மனைவியாகிய மானனீகையைப் பற்றிய பேச்சும், வாசவதத்தை மகன் நரவாணன், பதுமாபதி மகன் கோமுகன் ஆகிய இரு புதல்வரைப் பற்றிய பேச்சும் பாசர் நாடகத்தில் இல்லை.

பெருங்கதையிற் கூறுமாப்போல உதயணன் நால்வரை மணந்தான் எனினும், அவன் முதலில் மணந்த வாசவதத்தையினிடத்து வைத்த அன்பிற் குறைந்தவன் அல்லன். அக்காலத்திய வழக்கம், அரசராயின்,

பல மனைவியரைப் பெற்றிருப்பார் என்பது. தசரதன் அறுபதினுயிரம் மனைவியரைப் பெற்றிருந்தான் என்றும், துஷ்யந்தன் பல மனைவியரைப் பெற்றிருந்தான் என்றும், வாசவதத்தையின் தந்தை பிரச்சோதனன் பதினுயிரம் தேவிமாரை மணந்திருந்தான் என்றும், வாசவதத்தையின் பிள்ளை நரவாணன் எண்பதினுயிரம் தேவிமாரையும் மூன்று சிறந்த மனைவியரையும் பெற்றிருந்தான் என்றுஞ் செய்திகள் கூறப்படுகின்றன அல்லவோ? எருசேலத்தில் ஆட்சி புரிந்த பேரறிஞர் சாலமன் என்பார் எழுநூறு மனைவியரோடும் முந்நூறு பரத்தையரோடும் வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறார். அதனுல், பல மனைவியரோடு வாழ்வது அக்காலத்து அரசர் வழக்கம் என விடுக்க.

உதயணன், இங்ஙனம் மகளிர்மேல் மகளிராக மணந்ததால் உண்மையன்பு இல்லாதவன் என்று கூறத்தக்கான் அல்லன். வாசவதத்தை தீக்கிரையானதாகக் கருதிய உதயணன் "என்னை விட்டுப்போதியோ" என்று அரற்றியும் உரற்றியும் வீழ்ந்தும் எழுந்துங் கண்ணீர் சொரிந்து கதறினன். பிறகு, அடிக்கடி அவளைப்பற்றி நினைப்பவ னுனன். காடு வழியே போய்க் கொண்டிருக்கும் ஒருநாள், ஒன்றிய தேவியை உள்குவான் ஆகி அவன் நைந்த விதத்தைப் பெருங்கதை பின்வருமாறு கூறுகிறது :—

மான்பிணையைப் பார்த்து,

மான்மடப் பிணையே வயங்கழற் பட்ட
தேனேர் கிளவி சென்ற உலகம்
அறிதி யாயின் யாமும் ஆங்கே
குறுகச் செல்கம் கூறுய் எனவும் ;

(பக்கம் 273, வரி 148 முதல்)

மயிலைப் பார்த்து,

மதநடை கற்கும் மாமயிற் பேடாய்
... ...
மயர்வனள் விளிந்தவென் வஞ்சி மருங்குல்
மாறிப் பிறந்துழி மதியின் நாடிக்
கூறிற் குற்றம் உண்டோ எனவும் ;

புறுவினைப் பார்த்து,

வெண்சிறை செங்கால் நுண்பொறிப் புறவே
... ...
வாசவ தத்தை யுள்வழி யறியின்
ஆசை தீர அவ்வழி அடைகேன்

உணரக் கூறுய் ஆயின் பெடையொடு
புணர்வு விரும்பல் பொல்லா தெனவும்;

வண்டினைப் பார்த்து,
அஞ்சிறை அறுகாற் செம்பொறி வண்டே
வள்ளிதழ்க் கோதை உள்ளுழி யுணரின்
உய்த்தனை காட்டுதி யாயிற் கைம்மாறு
இத்துணை யென்பதொன் றில்லென இரங்கியும்;

இன்ன பிறவற்றைக் கூறியும், அவல நெஞ்சமொடு அறிவு பிறிதாகும் அரசனை அவன் நண்பர் தேற்றி மகத நாட்டிற்கு அழைத்துச் சென்றுர் என்று அறிகிறேம்.

அவள்பால் துய்க்கும் இன்பங் காரணமாகவே இங்ஙனம் உதயணன் வருந்தினன் என்பது ஆகாது. ஏனென்றுல் பதுமாபதியொடு பொருந்தி வாழும் நாளிலும் வாசவதத்தையைப் பற்றி அவன் நினைப்பதுண்டு. பதுமாபதி அவனை யாழ் பயிற்றுமாறு கேட்க, வாசவதத்தைக்குத் தான் யாழ் கற்பித்த நாள் மனத்தின் முன் வரவே, ஒன்றும் வாய் பேச மாட்டாது வருத்த முற்றுன் உதயணன். தன் அமைச்சருள் ஒருவனுகிய வயந்தகன் "உயிருடன் உள்ள பதுமாபதியைப் புறக்கணிக்காது, இறந்தவளிடத்தும் இருப்பவளிடத்தும் ஒத்த அன்பு வைக்க வேண்டும்" என்று சொல்லவும், அதனைக் கேளாளுய் உதயணன் மீண்டும் மீண்டும் கலக்கமுற்றுன்.

"கவன்றனன் இருந்த காவன் மன்னற்கு
வயந்தக குமரன் வந்து கூறும்
வாலிழைப் பணைத்தோள் வாசவ தத்தைக்கும்
பாசிழை யல்குற் பதுமா பதிக்குஞ்
சீர்நிறை கோல்போல் தானடு வாகி
நின்றி, பேரன் பின்றிவட் டாழ்த்து
நீங்கிற் றம்ம நீத்தோள் நினைந்தென
ஆங்கவன் உரைப்ப அதுவுங் கேளான்"

(காண்டம் IV. 5. வரி 41—47)

என்றதைக் காண்க.

இறந்த வாசவதத்தையை உயிர்ப்பிக்க வல்ல முனிவர் ஒருவர் இருக்கிறுர் என்று சொல்லி அவரிடஞ் செல்வோ மென்று நண்பர்கள் அழைத்துவர வந்த உதயணன், வழியிற் பதுமாபதியைக் கண்டு அவளை மணந்து கொண்டான். பிறகு, முன்னவளை நினைத்து வருந்துங்காலை, அவனது ஒருபாற் படாத மனநிலைக்கு வயந்தகன் இரங்கி யுரைத்தான்:

"காசி ராஜன் பாவையைக் கண்டே
வாசவ தத்தையை மறந்தனை யாகி
... ...
இரவும் பகலும் அறியா இன்புற்று
... ...
திண்ணிதின் அதனையுந் திறப்படப் பற்றாய்
பின்னிது நினைக்கும் பெற்றியை யாதலின்
ஒருபாற் பட்டது அன்றுநின் மனனென".

(காண்டம் IV. 6. வரி **44—53**)

அப்பொழுது உதயணன் விடை கூறியதிலிருந்து பதுமாபதியை மணந்ததற்குக் காரணம் புலனாகும். வாசவதத்தையும் பதுமாபதியும் உருவத்தால் ஒத்ததாலும், விதி மணக்குமாறு தூண்டியதாலும் அங்ஙனஞ் செய்ததாகச் சொன்னான்:—

"வடுவாழ் கூந்தல் வாசவ தத்தையோடு
இடைதெரி வின்மையின் அவளே யிவளென
நயந்தது நெஞ்சம், நயவா தாயினும்
பால்வகை வினையிற் படர்ந்த வேட்கையை
மால்கடல் வரைப்பின் மறுத்தனர் ஒழுகுதல்
யாவர்க் காயினும் ஆகா ததுவென".

(ஷை **55—60**)

இது பொய்யுரையன்று மெய்யுரையே யென்பது அவன் பதுமாபதியை முதல்முறை கண்டவேளை, அவன் மனநிலையைக் கூறுங் கவிஞர் கூற்றாலும் பெறப்படும்:—

"பூங்குழை மாதரை
... ...
கண்ணுறக் கண்டே தன்னமர் காதல்
மானேர் நோக்கின் வாசவ தத்தை
தானே இவளெனத் தான்தெரிந் துணரான்
மந்திர விதியின் அந்த ணாளன்
தந்தனன் மீட்டெனுஞ் சிந்தையன் ஆகி
உறுப்பினும் நிறத்தினும் வேற்றுமை இன்மையின்
மறுத்து நோக்கும் மறத்தகை மன்னன்".

(காண்டம் III-6. வரி **39—45**)

உருவத்தால் ஒத்திருந்தமையால், இறந்த வாசவதத்தையை முனிவன் மீட்டுக் கொடுத்துவிட்டான் என நினைத்தன்றோ முதலில் அவளைக்

காதலோடு நோக்கினன்? வாசவதத்தை உயிர்பெற்று வந்தபின் ஊடிய பொழுதும்,

"நாடுங் காலை நன்னுதல் மடவோய்
நின்னொடு ஒத்தமை நோக்கி மற்றவள்
தன்னொடு புணர்ந்தேன் தளரியல் யானென"

(காண்டம் IV. 9. வரி 101-3)

கூறினன்.

ஒக்கும் என்று அவன் சொல்லிய சொல் மிக்கு உடற்றவே, வாசவதத்தை அவனை மேவாது விலகியூடவும், உருவால் ஒப்பாளே யன்றிக் குணத்தால் ஒவ்வாள் என்று உதயணன் கூறித் தெருட்டினன்.

"உருவின் அல்லது பெண்மையின் நின்னொடு
திருநுதல் மடவோய் தினையனைத் தாயினும்
வெள்வேற் கண்ணி ஒவ்வாள் என்றவள்
உவக்கும் வாயில் நயத்தகக் கூறித்
தெருட்டியும் தெளித்தும் மருட்டியும் மகிழ்ந்தும்
இடையற வில்லா இன்பப் புணர்ச்சியன்"

(காண்டம் IV. பக்கம் 421)

ஆயினன்.

இறந்த வாசவதத்தை, இருக்கும் பதுமாபதி ஆகிய இருவருள் அறிவினும் ஒழுக்கத்தினும் யாவர் நல்லவர் என்று வசந்தகன் கேட்டதற்கு விடையாக,

"வாடிடை மழைக்கண் வாசவ தத்தை
கண்ணகன் ஞாலத்துப் பெண்ணருங் கலமவள்"

(காண்டம் IV. 6)

என்று உதயணன் கூறி அரற்றினன். சமஸ்கிருத நாடகமாகிய ஸ்வப்ன வாசவதத்தையின்கண் பிறகு வசந்தகனை அக்கேள்வியையே உதயணன் கேட்டதாகவும், வாசவதத்தை சிறப்பான தித்திப்புப் பண்டங்களைச் செய்து தந்தாள் ஆதலின் அவளே மேலானவள் என்று வசந்தகன் சொல்லியதாகவும் எழுதப்பட்டுளது. நாடகத்தில், வசந்தகன் மந்திரியாக அமைக்கப்படாது விதூடகனுக அமைக்கப்பட்டதே இந்த வேறுபாட்டுக்குக்காரணம்போலும்.

வாசவதத்தை, பதுமாபதி ஆகிய இருவருள்ளும் வாசவதத்தையே தன் கணவன் பிறமகளிரொடு நேயங்கொள்வதைப் பொறுதவள் என்பது பெருங்கதையால் விளங்குகிறது. விரிசிகை என்னும் முனிமகளுக்கு உதயணன் பூச்சூட்டியதை அறிந்தவுடன் அவளுக்கு மட்டிலடங்காச் சினம் உண்டாகிறது. "தாமரைப் பசுந்தாதினை நாடோறும் நுகர்ந்து

கொண்டிருந்தாலும் நெய்தற் பூவில் உள்ள சிறு தேனிற்கு ஆசைப்படுகின்ற வண்டை ஒத்தவர் ஆடவர் என்று பண்டே யுரைத்த பழமொழியை மெய்யாகக் கண்டேன், காமக் கலப்பு ஒழிக" (காண்டம் II. 16) என்றவாறு வாசவதத்தை சொல்லித் தந்தை வீட்டிற்கு ஏக நினைக்கின்றாள். பதுமாபதியை மணந்துளான் அரசன் என்றறிந்ததும் வேறு ஊடுகிறாள். பந்தாட்டத்தின் பிறகு அரசன் தேவியரைக் காணவேண்டும் என்று சொல்லிவிட, அழகிற் சிறந்த மானனீகை யென்னுந் தோழியை மறைத்தே வருகிறாள். அப்பெண்ணைத் தோழியர் கூட்டத்திற் காணவில்லையே என்று அவன் கேட்டதுங் கண்சிவப்புறுகிறாள். மானனீகையை உதயணன் மணக்க வாசவதத்தை இசைந்தே இராள், அவள் தன் தமக்கையே என்பது வெளிப்படா திருந்திருக்குமாயின். ஆனால், விரிசிகையை உதயணன் மணந்து கொள்வதற்கு அவள் இசைந்ததன் காரணம், விரிசிகைக்கு மாலை யணிந்த செய்தி அவளால் முன்னரே அறியப்பட்டமையென்க.

"மணிப்பூண் வனநகில் வாசவதத்தை
பணித்தற் கூடாள் பண்டே யறிதலின்
உவந்த நெஞ்சமொடு நயந்திது நன்றென"

(காண்டம் IV. 15)

என்று கவி கூறியதை உன்னுக.

அன்றி நான்காவது காண்டமாகிய வத்தவ காண்டம் முடிவாகின்ற விதத்தை நோக்கி, விரிசிகையை மணந்த பிற்பாடு துனியும் புலவியும் ஊடலுங் கொண்டாள் என்று சொன்னாலும் ஒக்கும்.

ஆனால், பதுமாபதியோ மணத்திற்குப் பின்னால் அவ்வளவு பொறுமை உடையவள் அல்லள். மணத்திற்கு முன்னரோ, எழுநிலை மாடத்துப் பள்ளியில் வித்தகர் எழுதியுள்ள சித்திரத்தை உதயணன் கண்டு களித்திருந்தவன் தன்னை மறந்தான் என்று ஊடி,

"பாலுஞ் சோறும் வாலிதின் ஊட்டினும்
குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்
மக்கள் என்று மதியோர் உரைத்ததைக்
கண்ணிற் கண்டேன் என்று கைந்நெரித்து"

(காண்டம் III. 14)

சினமுடையவளானவள். வாசவதத்தை வல்லவளாக விளங்கிய யாழிலே தானும் பயிற்சிபெற விழைந்ததாகப் பதுமாபதி ஒருநாள் உதயணனிடத்தே கூற, அவன் தத்தை இறந்ததற்கென வருந்தி ஒன்றுஞ் சொல்லமாட்டாதவனாய் இருந்த நிலையில், அவன் கலக்கத்தை யறிந்த பதுமாபதி "புலத்தல் யாவதும் பொருத்தம் இன்று" என நினைத்து, வேறு செயலை முன்னிட்டுச்செல்பவள்போல அவ்விடம் விட்டு அகன்றாள். அவனுக்கு

மேலும் மேலும் வருத்தம் தரலாகாது என்பதே அவள் எண்ணம். தத்தை உயிர்பெற்று வந்ததும் அவளை வணங்கினுள் பத்மா. பின்னரும், பல திங்கள் பிரிந்திருந்த தத்தையொடு அப்பல திங்கள் இப்பொழுது உதயணன் கூடியிருத்தல் வேண்டும் என்று வேண்டிக்கொள்கிருள்.

"பெருந்தகு கற்பினெம் பெருமகள் தன்னெடு
பிரிந்த திங்கள் எல்லாம் பிரியாது
ஒருங்கவண் உறைதல் வேண்டுவல் அடிகள்"

(காண்டம் IV. 8)

என்றவிடத்து,மூத்தாளைப் பெருந்தடி கற்பினள் என்று அவள் போற்றியது நோக்கத்தக்கது.

மானனீகையின்பால் வாசவதத்தை பொருமை மேற்கொண்டு அவளுடைய தலைமயிரை அரிவதற்கு ஆணை பிறப்பித்திருக்க, அவளுடைய உரோமங்களில் ஒன்றிலாவது கத்தரி படுமாயுன் உயிரை விடுவேன் என்று உதயணன் சொல்லியிருப்ப. அவ்வாணையினின்று விலக்குதற்குப் பதுமாபதியின் உதவியையே நாடினுன் உதயணன். அவளை அழைத்து "என் செயிர் காணுத தெய்வம் ஆகலின் உயிர் தந்தருள்" என விடுத்தான். இப்படிக் கூறியதால், மன்னவனுடைய குற்றத்தைஎடுத்துப் பேசாத பெற்றி யுடையவள் பதுமாபதி என்பது புலனும். குற்றத்தையே காணுதவள் எனின், எடுத்துப்பேசாதவள் என்பதுகூறவேண்டா. அவன் வேண்டுகோட்கு இணங்கி, பதுமாபதி வாசவதத்தைப்பாற் சென்று வணங்கி,

"சீறி யருளுதல் சிறுமை யுடைத்திது
வீறுயர் மடந்தாய் வேண்டா செய்தனை
அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை"

(காண்டம் IV. 14 வரி 96-99)

என்று கூறினுள். இவ்வாற்ருன் வாசவதத்தை பதுமாபதி என்ற இரு மனைவியரிடையே உள்ள குணவேறுபாடு அறியப்படும்.

இக்காவியத்தில் வரும் பந்தாட்டம் சிறப்புடையதொரு பகுதி. வாசவதத்தையும் பதுமாபதியும் காணும்படி, அவ்விருவருடைய தோழியர் அறுவர் பந்தடித்த விதத்தை உதயணன் பெண்வேடம் பூண்டு ஒரு பிடியின் மீதிருந்து கண்டான். நெட்டி, பஞ்சு, பட்டு இவற்றை அடைத்துத் திரட்டி, நூலாலும் கயிற்ருலும் நுண்ணிதாகச் சுற்றித் தைக்கப்பட்ட பல்வினைப் பந்துகள் ஏழு படுத்துக்கொண்டு, "கண் இமையாமல் எண்ணு மின்" என்று சொல்லி, பதுமாபதியின் தோழி இராசனை யென்பாள் ஆயிரந்தரம் அடித்து அகன்ருள். பின் வாசவதத்தை தோழி காஞ்சன மாலை 1,500 முறை அடித்து நீங்கினுள். அதற்கு அப்பால், பதுமையின்

செவிலி அயிராபதி என்னுங் கூனி, பந்தடித்துக் கொண்டிருக்கும்போதே அவிழ்ந்த கூந்தலை முடித்தும், தன் நெற்றியில் உள்ள பொட்டின் கண்ணே பந்தினை யேற்றும், பார்ப்போர் மகிழ 2,000 முறை அடித்தாள். பிறகு வாசவதத்தைக்கு வலத்தோள் அனைய விச்சுவலேகை பந்தடிக்குங் கோலைக் கையிலே பற்றிக்கொண்டு பந்துகளைத் தட்டி யெழுப்பிப் பத்தியிற் குதித்துப் பறப்பனள் ஆகி, 2,500 முறை அடித்தாள். அதன்பின், பத்மாவின் சிந்தையை யொத்த ஆரியை என்பாள் பந்துகளை இரண்டு கையினாலும் அடித்து, ஆகாசத்திற்கும் நிலத்திற்கு மிடையே திரிந்து விழும் பறவைபோல, நின்றாள் இருந்தாள் என்பதை அறியாவண்ணம் பந்தொடு புருவமும் கண்ணும் கையும் மனமும் ஓடப் பலதோள் பெற்றாளோ என்று சொல்லும்படி மூவாயிரமுறை அடித்து நின்றாள். பிறகு, வாசவதத்தையின் தோழியாக அமர்ந்திருந்த மானனீகை யென்பாள், முன் பந்தடித்த ஐவரையும் விஞ்சுவாளாய்ப் பந்தாட்டிலக்கணத்தை எடுத்துப் பேசி 21 பந்துகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அடித்தெழுப்பி, கையுங் காலும் மெய்யும் இயைய வியத்தகுமாறு விளையாடினாள். அக் காட்சியைக் கொங்குவேள் இங்ஙனங் கூறுகிறார் :—

“ஐயபந் தெழவெழ அதனுடன் எழுதலிற்
கையுங் காலும் மெய்யுங் காணார்
மண்ணினள் விண்ணினள் என்றறி யாமை
ஒண்ணுதல் மாதரை யுள்ளுழி யுணரும்
தன்மையும் அரிதெனத் தனித்தனி மயங்கி
மாயங் கொல்லிது மற்றென் றில்லென”

(பக்கம் 439)

ஆயத்தார் வியந்தனர். அவள் பந்து இருபத்தொன்றையும் பறக்கவிட்டு அடிக்குங்கால், இடையிடையே நெகிழ்ந்த ஆடையைத் திருத்திக்கொண்டும், வியர்வை நீரைத் துடைத்துக்கொண்டும், பந்துகள் சுற்றும் முறையைச் சொல்லிக்கொண்டும், அடிமுதல் முடிவரையுள்ள அணி பலவற்றைத் திருத்திக்கொண்டும் அடித்தாள் என்று அறிகிறோம். இடையிடையே கண்ணை மூடிக்கொண்டும் அடித்தாள் என்று சொல்லப்படுகிறாள்.

“ஆழியென உருட்டியும் தோழியொடு பேசியும்
சாரிபல ஓட்டியும் வாழியென வாழ்த்தியும்”

(பக்கம் 440, வரிகள் 241-2)

பற்பல வகையாக எண்ணாயிரம் முறை அடித்தாள் மானனீகை என்று பெருங்கதை பேசுகிறது. அவளைக் காவலன் கண்டாற் கலங்கவுஞ் செய்வான் என்று வாசவதத்தை உயிர்ப்பாற்றினாள்.

மானனீகையின் பந்தாடு எழிலைக் கண்ட உதயணன் உள்ளத்தை, ஒருப்படுக்க மாட்டாது தவித்தான். பிறகு, அவள்பால் தனக்கு இருந்த விருப்பத்தை அவளுக்குத் தெரிந்த யவன மொழியில் அறிவித்தான். இதற்கு வாசவதத்தையைப் பயன்படுத்திக் கொண்டான். எப்படி யென்றால், வாசவதத்தைக்கு வண்ணமகள் மானனீகை செய்த அலங்காரம் நன்றாக இல்லையென்று சொல்லி, அதனைக் கலைத்து விட்டுத் தான் வேறு ஒப்பனை செய்ததாகச் சொல்லி அதனைப் போய்க் காட்டுக என்றான். அவளும் அறிந்துகொண்டு அவ்வண்ணமே விடை அளித்தாள். அவளுக்கு அவனொடு அன்புடையவளாய் இருப்பதில் வாசவதத்தை காரணமாக அச்சம் இருந்தாலும், அவன் உயிரை விடுவேன் என்று கூறினதால் இரங்கி ஒருவாறு இணங்கினாள். மானனீகை உதயணன் ஆகிய இருவருந் தனித்துக் கண்ட விதத்தைச் சூழ்ச்சியால் அறிந்துகொண்ட வாசவதத்தை ஒரு நாள் மானனீகையை மறைத்து வைத்துவிட்டுத் தானே அக்குறியிடத்துச் சென்று ஊடினவள்போல இருந்தாள். உதயணன் அங்கே வந்து அவளை மானனீகை என்று நினைத்துக் கொண்டு, அவள் ஊடலைத் தணிக்க வேண்டிப் பின்வருமாறு கூறினான்.

> " முரசு முழங்குதானை அரசொடு வேண்டினும்
> தருகுவல் இன்னே பருவரல் ஒழியினி
> மானே தேனே மான னீகாய் "

(பக்கம் 448, வரி 227-9)

என்று கூறிக் காலைப்பற்றவுங் கேளாது, மறுத்தவள்போல இருந்தாள் வாசவதத்தை. மீண்டும், அவன் அவளை வணங்கி, " நேற்று நம்மை ஐயுற்று வினவிய வாசவதத்தையை நான் தெளித்து வந்த நிலைமையையும் நீ தெளிந்திலையே " என்று சொல்லி, " அருள் " என்று அடுத்தடுத்து உரைப்பவும், ஆற்றுனகவும், இதச்சொல் கூறவும் வணக்கஞ் செய்யவும், அவள்

> " நக்கனள் ஆகி மிக்கோய் கூறிய
> மானுந் தேனும் மான னீகையும்
> யானன்று என்பெயர் வாசவ தத்தை "

(ஷை 248-50)

காண்பாயாக என்றுரைக்கவும், அவன் அவ்விடத்தைவிட்டு ஓடினான். இங்ஙனம் நகைச்சுவை விளக்கும் படங்கள் பல பெருங்கதையில் உண்டு.

நகைச்சுவை ததும்பும் பகுதிகளில் இன்னொன்று, பதுமாபதி உதயணன் வைத்த கண்ணியையும் மாலையையுஞ் சூடிச் சந்தனத்தைப் பூசி வந்தாளாக, அவள் தோழி யாப்பியாயினி அவளுடைய வேறுபாட்டை அறிந்ததைக்குறிப்பாகத் தெரிவிக்கும் இடம். அவளையே பார்த்து, மன்ன

வன் தங்கை பதுமாபதியை இச்சோலையிற் கெட்டடித்தென், நீ யார், உன்னைப்போலவே அவள் இருப்பாள் என்றவாறு சொல்லித் தோழி ஏளனஞ் செய்கிறாள்.

" நீ யார் நங்கை நின்னே போலும் எம்
சேயான் தங்கை செல்வப் பாவை
மாயோள் தன்னை மலர்த்தகைக் காவினுள்
இன்னினிக் கெடுத்தேன் "

(பக்கம் 305, வரி 98-101)

என்றதைக் காண்க.

பதுமாபதியினுடைய தோழி அயிராவதி, மாறுவேடம் பூண்டிருந்த உதயணனுடைய ஊரையும் பேரையும் உரைக்குமாறு வேண்ட, அவன் தன் உண்மைப் பெயரையும் ஊரையுங் கூருது, கொண்டிருந்த அந்தணக் கோலத்திற்கு ஏற்ப இரத்தினபுரத்துச் சாண்டியன் மகன் மாணகன்என்று விடையிறுத்தான். இவ்விடத்தில் உதயணன் பொய் கூறினனேனும், மெய்யைக் கூறுவதாகச் சொன்னவன் அல்லன் என்பதைக் குறிப்பாகக் கவிஞர் காட்டியுள்ளார். இதனைப் பின்வரும் அடிகளால் அறியலாம்.

" எந்நாட்டு எவ்வூர் எக்கோத் திரத்தீர்
யாமும் நும்மை அறியப் போமோ
மாய்மையாக மறையா துரைமின் "

என்று தோழி கேட்டாள்.

" நன்றால், மற்றது கேளாய், நன்னுதல் " என்றே உதயணன் தொடங்கினன். "நீ கேட்டது நல்லதே. வாய்மையாக மொழி யென்ருய். மற்றதைக் கேட்பாயாக" என்றான். " மற்றதை " என்று சொன்னதனல், வாய்மை யல்லாத பொய்யைக் கேட்பாயாக என்றே சொல்லி உதயணன் தப்பினன் என்பதுபோலக் கொங்குவேள் காட்டினர். ஆயினும், " மற்று " அசை யென்று தள்ளப்பட்டு, நின்ற " அதை " என்பதால் வாய்மையே உரைக்கப்பட்டதாகத் தோழி நினைத்துக்கொள்ள இடம் வைத்துப் பாடினர் இவர் என்க.

இக்காவியத்தில் சொல்லும் பொருளும் ஒத்துவரும் இடம் பல உள. மானனீகையின் தலைமயிர் அரிபட வேண்டிய வேளையில், யூகி அச்செயல் நிகழாதவாறு தடுக்கும் பொருட்டுப் பித்தன் வேடம் பூண்டு, கூறை கீறி நீறுமெய் பூசிக் கண்டோர்வெருவ வருகின்றான். அவனைக் கண்டதும், பாவையர் பலரும் பயந்து இரிந்து ஓடுகிறார்கள். அதனை வருணிக்கின்ற கவிஞர், அவர்கள் உருண்டு போவது போலவே தம் சொற்களால் கூறுகிறார்.

"விழுநரு மெழுநரு மேல்வர நடுங்கி
அழுநருந் தேவிபின் பணிநரு மாக"

என்ற இடத்து உருட்சி காணப்படுகிறது.

யௌகந்தராயணன் பாகிரதி என்ற ஒரு பெண் வடிவெடுத்து, உஞ்சையில் நீராட்டினைச் சென்றவாண்டு மறந்ததால் நளகிரி என்னும் பட்டத்து யானை முன்னர் மதவெறி கொண்டதென்றும், இவ் யாண்டிலும் நீராட்டுவிழா நடத்தாவிட்டால் தான் மீண்டும் அவ் யானையினுள்ளே புகுந்து ஊருக்குத் துயரம் விளைப்பேனென்றுங் கூறுகிறான். அப்போது உண்மையிற் சாமி வந்து ஏறியதொரு காட்சியைக் காட்டுவார் போலவே கொங்குவேள் மாக்கதையை எழுதினார்.

"கொடும்பூண் மார்பிற் கூந்தல் பரப்பிப்
பிடிக்கை யன்ன பெருந்தோள் ஓச்சி
இடிக்குரல் முரசின்முன் எழுந்தனள் ஆடி
விழாக் கோளாளரைக் குழாத்திடைத் தரீஇத்
திருநீ ராட்டணி மருவீ ராயிற்
பிணக்குறை படுத்துப் பிளிறுபு சீறி
இன்றுஞ் சென்றியான் குஞ்சரம் புகுவல்"

என்ற அடிகளால் அந்த ஓவியத்தைத் தீட்டினார்.

உதயணன் கவலையின்றி யிருப்பதாகச் சொல்லப்படும் ஓரிடமுஞ் சொல்லோசையாலேயே அப்பொருளைக் கொடுப்பதாய் உள்ளது. வாசவதத்தையை மணந்தபின், பகலிரவு அறியானாய் இன்பம் ஒன்றே துய்ப்பவனாய், தன் நாட்டைப் பகைவன் பாஞ்சால அரசன் ஆருணி யாள்வதைக் கருதானாய், தன் தம்பியர் ஆகிய பிங்கலன் கடகன் என்பார் அரசிழந்திருப்பதையும் நினையானாய்க் கவலையின்றி இருக்கின்றான் என்பதை, இடபகன் என்னும் மந்திரி மற்றொரு மந்திரியாகிய யூகிக்குத் தெரிவிக்கிறான். அவ்வேளையில், பெருங்கதை கூறுஞ் சொற்கள் ஓசையாலே அக்கவலையின்மையைக் காட்டுகின்றன.

"ஆருணி அரசன் ஆள்வது மறியான்
தன்னுயிர் அன்ன தம்பியர் நினையான்
இன்னுயி ரிடுக்கண் இன்னதென் றறியான்
... ...
செவ்வியுங் கொடான் இவ்வியல் புரிந்தனன்"

(பக்கம். 215)

என்ற இடத்தை நோக்குக.

மானனீகை அடித்து எழுப்பிய பந்துகள் மண்ணிற் பட்டு விண்ணில் ஓங்கிய செய்தியைக் கூறுகின்ற இடத்து, பந்தின் விரைவையும்

மானனீகையின் விரைவையும் பெருங்கதை சொல்லொலியால் வருணிக்கின்ற நயம் வியக்கத்தக்கது.

> " மாறுமா றெழுந்து மறிய மறுகி
> ஏறுப இழிபஆ காய நிற்பன
> ... ...
> ஓடா நடவா ஒசியா ஒல்காப்
> பாடாப் பாணியின் நீடுயிர்ப் பினளாய் "

என்றதைக் காண்க. பந்து அடிக்கடி அடிக்கப்படுவது போன்ற எண்ணம் இவ்வடிகளைப் படித்தவுடன் உண்டாவது திண்ணம்.

மானனீகை உதயணனொடு கள்ளநட்புப் பெற்றதற்காக அவள் கையைக்கட்டி வருத்தினாள் வாசவதத்தை. பிறகு, அவள் தன் தமக்கை யென்பதை அறிந்துகொண்டவுடன், வாசவதத்தை கண்ணீர் பெருக்கிப் பிழை செய்தேனே என்று இரங்குகிறாள். அப்பொழுது பெருங்கதை உரைக்குஞ் சொற்களே அழுகையைப் புலப்படுத்திவிடுகின்றன.

> " குழூஉக்களி யானைக் கோசலன் மகளே
> அழேற்கவெம் பாவாய் அரும்பெறல் தவ்வை
> செய்தது பொறுவெனத் தெருளாள் கலங்கி,
> ... ...
> விம்மி விம்மி வெய்துயிர்த் தென்குறை
> எம்முறை செய்தேன் என்செய் தேனென
> மாதர்க் கண்ணீர் மஞ்சன மாட்டி
> ஆதரத் துடைந்தனள் பேதைகண் துடைத்து "

(பக்கம். 453)

என்ற அடிகள் அவலச் சுவையைக் காட்டுகின்றன அல்லவோ? பல கருத்துக்களுக்கு ஏற்றவகையிற் பாடக்கூடிய பலவித ஓசையை யுடைய விருத்தம் முதலான பாவினங்களையும், கலி பரிபாடல் ஆகிய பாக்களையும் ஆளாதிருந்தும் ஆசிரியப்பா ஒன்றிலேயே பெருங்கதை முழுதும் எழுதிய இவ்வாசிரியர், இடத்திற்கு ஏற்ற வகையிற் பொருளொடு பொருந்தச் சொல்லமைத்துச் செய்யுள் செய்த திறத்தைப் பாராட்டாது இருக்க முடியாது.

இதுகாறும் எழுதியவற்றாற் பெருங்கதையின் கதைச்சுருக்கமும், தமிழ்க் கதைக்கும் சமஸ்கிருதக் கதைக்கும் உள்ள வேறுபாடும், உதயணன் வாசவதத்தை பதுமாபதி ஆகியோருடைய காதலன்பு வேறுபாடும் ஒருவாறு உரைக்கப்பட்டன. இக்காப்பியத்திற் காணப்படும் நகைச்சுவைப் பகுதிகள் சிலவும், சொல்லும் பொருளும் ஒத்துநின்று இன்பம் விளக்கும் பகுதிகள் சிலவும் எடுத்துக் காட்டப்பட்டன.

ஒரு பாடலின் ஆராய்ச்சி

Panditha Vidvan L. P. K. R. RAMANATHAN CHETTIAR,
Lecturer in Tamil, Annamalai University.

ஆரூரர், கொங்கு நாட்டில் கொய்யலாறு எனப்படுங் காஞ்சி யாற்றங் கரையிலுள்ள பேரூரை அடைந்தார்; அங்கே திருக்கோயில் கொண்டருளுந் தம்பிரானர், தில்லைமன்றுள் நின்று ஆடுந் திருக்கோலத்தை ஆரூரருக்குக் காட்டினர்; ஆரூரர், அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்த நிலையைச் சேக்கிழார், ஓருமைத் திருப்பாடலிற் புலப்படுத்துகின்றார்; அப்பாடலிற் காணப்படும் பொருணயங்களை ஈண்டுத் தெரிவிக்கின்றேன்.

"காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையிலன் பென்பிணை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார்"

(ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம்—90.)

என்பது பாடல். ஆரூரர், இறைவனுடைய திருநடனக் கோலங் கண்டவுடன் பணிந்தார்; பேரன்பு கொண்டார்; மெய்யுணர்விற் பேரின்பம் பொங்கியது. தாண்டவம் புரியுந் தம் பெருமானை யடையுமாறு, அக்காட்சி அவருக்குக் கிடைத்தபின் நேர்ந்த நிலையின் விளைவை எவராலும் அளவிட்டுரைக்க வியலாது. என்பது இதன் கருத்தாம்.

இதன்கட் "காண்டலும்" என்ற உம்மீற்று வினையெச்சம், இறைவனைத் தொழுதற்கண் ஆரூரருக்குள்ள விரைவைக் குறிப்பதாம். உம்மீற்று வினையெச்சம் விரைவுப் பொருளில் வருமென்பது, "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே" (39. 35.) என்னுங் கலித்தொகைப் பகுதிக்கண், நச்சினர்க்கினியர், "நனவிற்புணர்ச்சி நடந்ததாக அப்பொழுதே" என வுரை யெழுதி, "நடக்கலும் என்றது, உம்மீற்று வினையெச்சம்; விரைவு தோன்ற நின்றது." என விளக்கியதாற் புலனும்.

" தோழுது, வீழ்ந்து " என்பன முறையே, இறைவனைச் சேய்மையிற் கண்டவுடன் கைகுவித்தா ரெனவும், அண்மையில் நெருங்கியவுடன் அடி வீழ்ந்தா ரெனவுங் கொள்ளக் கிடக்கின்றன. கம்பரும்,

" வந்தெதிரே தொழுதானை வணங்கினன் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான் "

(குகப் படலம் 32)

என்னும் பாடலில், தொழுதல், வீழ்தல் என்னுஞ் சொற்களை இப்பொருளிலே வழங்குதலைக் காணலாம். இங்கே குகன், பரதனைச் சேய்மையிற் கண்டபோது கைகுவித்தா னென்பதும், அதுகண்டு பரதன் வணங்க, அண்மையில் வந்தவுடன் அவனடியில் வீழ்ந்தா னென்பதுங் கருத்தாம். இப்பாடற்கு அறிஞர்கள் பலவாறு உரை கூறுகின்றனர்.

இனி, " உடனெழுந்து " என்றது, பெரியோரைப் பணியுங்கால் மேற்கொள்ளும் நன்முறையையும், மீண்டும் இறைவனைக் கண்டு மகிழ்தற்கண் ஆரூரருக்குள்ள விரைவையுங் காட்டுகின்றது.

தொடர்புடையார்மாட்டு நிகழ்வது அன்பு; அவர், தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலாக ஓரளவி லமைவர்; இறைவன்மாட்டு வெளிப்படையாகவேனும், மறைவாகவேனும் எல்லோருக்குந் தொடர்புண்டு; ஆதலின், அவன்மாட்டு ஆரூரருக்கு நிகழ்ந்த அன்பு, " கரையிலன்பு " எனப்பட்டது. கரை-எல்லை. அன்பு எல்லை கடந்து பெருகுகின்றமையின் தசையளவிலன்றி எலும்பையும் உருக்கிய தென்பார், " கரையிலன் பென்பினை யுருக்க " என்றார். அடியாருக்கு ஆண்டவன்மாட்டு நிகழ்வது அன்பு எனவும், ஆண்டவனுக்கு அடியார்மாட்டு நிகழ்வது அருள் எனவுங் கூறப்படு மரபுக் கேற்ப, " அங்கிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற அன்பனார் " எனப் பின்வரும் பாடலிற் கூறுதலுங்காண்க. இதனை " அருளுமன்பு மறனு மூன்றும் " (5. 80.) என்னும் பரிபாடற் பகுதிக்கு " நின்னருளும் அதனையுண்டாக்க நின்னிடத்து யாஞ் செய்யு மன்பும் " எனப் பரிமேலழக ரெழுதிய வுரையானு மறிக.

இரண்டாம் அடியில், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளிற் புலப்படாவின்பம், ஆரூரர்தம் மெய்யுணர்விற் பொங்கிய தென்றார். " ஐம்புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்க " என்னும் இப்பகுதியின் சொற்பொருளோடு,

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு "

(திருக்குறள். 354.)

என்னும் பொய்யாமொழியின் சொற்பொருள் இயைந் திருத்தல் நோக்கத் தக்கது. ஐம்பொறிகளால் நுகரப்படுமின்பமாய, சுவையொளியூ றோசை

நாற்றங்கள் அழியுமியல்பின. மெய்யுணர்வால் நுகரப்படுமின்பம் என்றும் அழியாவியல்பினது ; இது பற்றியே இவ்வின்பம் பேரின்ப மெனப்படுகின்றது. இறைவனை யுணர்தற்கு வாயில் மெய்யுணர்வே யாகலின், " மெய்யுணர்வினிற் பொங்க " என்றார். "மெய்யுணர்வுறு வொருமை நிலவிய சிந்தையுடன்" கறையூர்க் கொடுமுடிக் கோயிலை நீங்குவாராய்ப் பலபதிகளிற் பணிந்து, பேரூரை யடைந்தார் ; என முன்னர்க் கூறியதும் ஈண்டு நினைக்கத்தக்கதாம்.

" கொடும்பா டறியற்க வெம்மறிவெனவே" (2. 76.)

என்னும் பரிபாடற் பகுதியில் " எம்மறிவு கொடும் பாடறியற்கவென மெய்யுணர்வினையே வேண்டினர் ; வீடு அதனாலல்லது எய்தப்படாமையின்." என உரையெழுதப்பட்டிருத்தலுங் காண்க.

" தாண்டவம் புரியுந் தம்பிரானாரைத் தலைப்படக் கிடைத்தபின் " என்ற பகுதியில், " கிடைத்த" என்னுஞ் சொல்லாற்றலால், தம்பிரான் தோழருக்குக் கிடைத்த, தம்பிரானாருடைய திருநடனக் காட்சியின் அருமையும் பெருமையும் புலனாம். திருநடங் கும்பிடப்பெறுவதை ஆரூரர் பெறுதற்கரிய பெரும் பேறாகக் கருதுபவ ரென்பது, இப்பாடலை யடுத்துள்ள—

" பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார்
புரிநடங் கும்பிடப் பெற்றால்
என்னினிப் புறம்போ யெய்துவ தென்று
மீண்டெழுந் தருளுதற் கெழுவார் "

என்னும் பாடற் பகுதியாலும், தில்லையில் இறைவனைக் கண்டபோது இவர் கூறியதாக அமைந்த,

" தெண்ணில மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமாம்"

(தடுத்தாட்கொண்ட புராணம். 107)

என்னும் பாடற் பகுதியாலும் விளங்கும். திருநாவுக்கரசர் பாடியருளிய,

" குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண் ணீறு
மினித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.''

என்னுந் திருப்பாடலும் நோக்குக.

ஆரூரரின் ஈடுபாடுகண்டே, முன்பு திருப்பனையூர்ப்புறத்தும் திருக்கூத்துக்காட்சி அவருக்கு இறைவனு லளிக்கப்பட்டதுபோலும்.

இனி, "தம்பிரானுர்" என்னுஞ் சொல், ஆரூரர் தம்பிரான் தோழராதலை நினைப்பிக்கின்றது.

"**தாண்ட**வம் **புரியும்**" என்ற வளவில், **தாள்** என்ற **சொல்லின்** நினைவும், "**தலைப்பட**" என்றவளவில், **தலை** என்ற சொல்லின் நினைவும் வருதலை நோக்குங்கால், **தாடலை** என்னுஞ் சிறந்த சொற்றெடர்நினைவில் வருகின்றது. "**தலைப்**பட்டாணங்கை தலைவன் **றளே**" என்புழியுங் காண்க.

ஆரூரர், பதினெட்டாம் யாண்டில் வீடுபெற்ற இளைஞராதலிற் "**சைவ ஆண்டகையார்**" எனப்பட்டார்.

"மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன்
மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனுர் தில்லை மன்றுணின் றுட
னீடிய கோலநேர் காட்ட" (ஏயர்கோன். 89)

என்பதனுல், ஆடற் கோலம் ஆரூரர் பொருட்டு அங்**கே** இறைவனுற் காட்டப்பட்ட தென்பது தெளிவாம். இதுகருதியே "**அடுத்தவந் நிலைமை**" என்றுர். இனி,

"அகவ ருண்ட லாடுத னடித்த
லசைதல் பெயர்த்த லடுத்தல்கூத் தாடல்" (363)

என்னும் பிங்கலச் சூத்திரத்தில், அடுத்தல் என்பதற்குக் கூத்தாடுதல் என்னும் பொருள் காணப்படுதலின் ஆண்டகையாருக்காகத் திருக்கூத்தாடிய அந்நிலைமையில், எனப்பொருள் கோடலும் பொருத்தமாம்.

பேரின்பம் பொங்குதலே ஒருவன் எய்தவேண்டும் பெரும் பேருதலின், அதனை ஆரூரர் பெற்றுவிட்டார் என்பதைப் புலப்படுத்த "விளைவு" என்றுர். யாருரைப்பார் என்றமையாது "**யாரளவறிந்துரைப்பார்**" என்றதனுல், யாருந்தத்தம் அளவிற் கேற்ப வுரைக்கலாம்; ஆனுல், அவ்விளைவின் அளவறிந்து முழுதுஞ் சொல்ல வியலாதென்பது பெறப்படுகின்றது.

இவ்வாறே, சேக்கிழார் பெருமானின் தெய்வ **மணக்**குஞ் செய்யுளெலாம் பார்க்கப் பார்க்க ஆழ முடையன.

ஆரூரர், முன்பு, இறைவனைத் தில்லையிற்கண்ட நிலையைப் புலப் படுத்திய சேக்கிழார்,

" கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்து "
(தடுத்தாட் கொண்ட புராணம். 107.)

என்றதற் கேற்ப, ஈண்டும்,

" கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக்
கலுழிநீர் பொழிதரக் கண்டார் " (89)

எனவும், ஆண்டு,

" பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் " (தடுத்தாட்-106)

என்றதற்கேற்ப, ஈண்டும்,

" ஐம்புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்துமெய்
யுணர்வினிற் பொங்க " எனவும்,

" இன்பவெள்ளத்து மன்னிய பாடன் மகிழ்ந்து " (91)

எனவுங் கூறுதல் கண்டு மகிழத்தக்கதாம்.

பின்பு, தில்லைக்குச்சென்ற ஆரூரர், திரு நடனக் காட்சியைத்தாம் திருப்பேரூரிற் கண்ட நிலையைச் சிறப்பித்து,

" ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்று மன்றே " (தேவாரம் 90-10.)

எனப்பாடி யருளியதும், இதனை நினைத்துச் சேக்கிழார் பெருமான்,

" மடித்தாடு மடிமைக்க ணன்றெடுத்து
மன்னுயிர்கட் கருளு மாற்றால்
அடுத்தாற்று நன்னெறிக்க ணின்றார்கள்
வழுவிநர கணையா வண்ணம்
தடுப்பானைப் பேரூரிற் கண்டநிலை
சிறப்பித்துத் தனிக்கூத் தென்று
நடிப்பானை நாமனமே பெற்றவா
றெனுங்களிப்பா னயந்து பாடி " (ஏயர்கோன்-115.)

எனப்பாடி யருளியதுங் காண்க.

பாயிர வகைகள்

V. S. P. மாணிக்கம்.

ஒருபொருளின் பெருமை கருத்து முதலியவற்றை முன்னர்ச் சுருக்கிக்கூறும் உரை பாயிரம் எனப்படும் "பாயிரங் கூறிப்படை தொக்கா லென் செய்ப" என்னும்பழமொழிச் செய்யுளான் (249) அது விளங்கும் அதுதான் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம், உரைப் பாயிரம் என மூவ் வகைப்படும் தொல்காப்பியத்தின் இறுதி ஈரியல்களில் காணும் நூற்பாற் களிற் சில எடுத்துக்கொண்டு, வேறு பலதாமே படைத்துக் கொண்டு தொல்காப்பியர்க்குப் பிற்காலத்தார் வளர்த்துக் கொண்ட ஒரு பொரு ளன்றே பாயிரம் என்பது—.

செய்யுளியல், மரபியல்களிலுள்ள சூத்திரம், ஓத்து, படலம் காண் டிகை, உரை முதனூல், வழிநூல், ஐயிருகுற்றம், அழகு, எண்ணுன்குத்தி என்றிவற்றைத் தாமே மிகுத்துக் கொண்ட இருபாயிரம். சார்புநூல், நூற் பொருட்பயம், எழுமதம் என்றிவற்றொடு கூட்டி நூலினியல்பிவைஎனவும் தாமே பகுத்துக் கொண்ட நாள்கனியல்பிவை எனவும் ஆக நூற்றிறன் நுவல்வோன்திறன், நுவலுந்திறன், கொள்வோன்திறன், கொள்ளுந்திறன் என ஐந்து பகுதியை யுடைத்து பொதுப்பாயிரம் என்ப. இப் பொதுப் பாயிரம் ஒவ்வொரு இலக்கண நூன்முகத்தும் வேண்டுவதின்று. ஆயின் யாதானுமொரு நூலைக் கற்பிக்கப்புகும் ஆசிரியனும் கற்கப்புகும் மாணவ னும் முன்னர் அறிய வேண்டுவதொன்று. நூலையும் ஒரு பகுப்பாக வுள் ளடக்கிப் பொதுப்பாயிரம் ஐந்து பகுதியை யுடைத்து என்றலும் பொதுப்பாயிரத்தை வுள்ளடக்கி 'நூலினியல்பே நுவலினோரிரு பாயிரந் தோற்றி' என்றலும் முரணெனக. 'பாயிரம் பொதுசிறப்பென விரு பாற்றே' என்றுமுன்னர்க் கூறியொழிந்தமையின் 'நூலினியல்பே நுவலின் மும்மையினொன்றாய்' என்று போதலே சாலு மெனக. பாயிரம் உறுப் பாகவும் நூல் உறுப்பியாகவுங் கருதப்படுதலின் உறுப்பாகிய பாயிரத் திற்குப் பகுப்புச் சொல்லுங்கால் உறுப்பியாகிய நூலையும் ஒன்றாகக் கூறல் மலைவாதல் கருதி இறையனாரகப் பொருளுரை தொல்காப்பியப் பாயிர வுரைகள் பொதுப்பாயிரம் நான்கு பகுப்புடைத்து என்று கூறுவதொக்கும்.

எழுத்தை முதலெழுத்தெனவும், சார்த்து வரன் மரபின் மூன் றொடு பின்னும் எழு கூட்டிப் பத்தாக்கினும் அவற்றை யெல்லாஞ் சாம் பெழுத்தெனவும் இரண்டாகவே பகுக்கு முறையானும், வழிநூலென்று மட்டுங் கூறியொழியாது முதநூலின் நீங்கிய நூல்களையெல்லாம் அடக் குதற் கென்றே அந்நூல் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்த்தல் என்னும் நாற்பாற்று என்றுவகை கூறியிருத்தலானும் பின்

ஞோர் சார்புநூல் என்ற வொன்றை மிகுத்தல் முறையற்ற தென்க. ‘ஆக்கி யோன் பெயரே வழியே யெல்லே’ ‘முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்’ என்பன காண்க. முதலும் வழியும் என இருவகை நூலின் மிகுத்துச் சார்புநூலென ஒன்று வேண்டின் அந்நூலினைப்பற்றி ‘ஒரு நூல் பிறந்த வழிச்சார்பின் ரார்பெனக் கூறல் வேண்டுவதாகலானும், அதனைச் சார்ந்து தோன்றில் சார்பென்னுஞ் சொல்லை மும்முறை சொல் லியும் அதன்பின்றோன்றிய நூற்கு நான்முறை சொல்லியும் எண்ணிகந் தோடுதலானும்’ வேண்டாமை தக்கது என்பர் பேராசிரியர். வழிநூற் பகுப்பு நான்கனுள் மொழிபெயர்த்தல் என்பதும் ஒரு பகுப்பாகத் தொல் காப்பியத்தே இடங் கொண்ட முறையை எள்ளளவு நினைப்பின் தம் மொழியறிவொடு பிறமொழியறிவுஞ் சேர்ந்த தமிழர்தம் நுண்புலமும், மொழிபெயர்ப்புநூல்களொடு கூடிய தமிழ்நூற் பெருக்கமும் அவை யெல்லாம், ஐயகோ மறைந்தொழிந்த தோற்றமும் புலப்படா தொழியுங் கொல்! பொருளைப் பெயராது சொல்லைப் பெயர்த்தலும் (மாற்றுதலும்) அம் மொழிநடையா லெழுதாது தமிழ்மொழி நடையா லெழுதலும் மொழிபெயர்ப்பார்க்கு வேண்டும் இலக்கணம் என்பதை ‘மொழிபெயர்த் ததர்ப்படயாத்தல்’ என்னும் அடி காட்டாநிற்கும்.

நூற்பாவுட் பொதிந்தவற்றைக் கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத் திரட்டிக் கூறுவது காண்டிகை எனப்படும். நூற்பாவினுட் பொதிந்த பொருளன்றியும் இன்றியமையாது வேண்டப் படுபவை யெல் லாம் தன்னூல் கொண்டும் முதனூல் கொண்டும் தடைஎழுப்பி விடை கொடுத்து உரைக்கப்படுவது ‘உரை’ எனப் பெயர் பெறும் என்பது தொல்காப்பியம். பின்னோர் ‘விருத்தி’ என்பதும் அதுவே. உரை என்பது பொதுச் சொல்லாகிக் காண்டிகை யுரை, விருத்தியுரை யென வழங்க லாயிற்று.

ஆக்கியோன் பெயர் முதலாகக் காரணம் என்ப தீறுக வுள்ள பதி னொன்றினையும் ‘சிறப்புப் பாயிரம்’ என்ப. ஆசிரியன் வரலாறறிதல், முந்துநூலறிதல், எல்லையறிதல், காலமறிதல், நூற்பிறப்பிற்குக் காரண மறிதல் என்றின்னோ ரன்னவை வரலாற்றாராய்ச்சிக்கு இன்றியமையாதன வாகலின் இப்பாயிரஞ் சிறந்தபயன்தருவது. ஒவ்வொரு தமிழ்நூற்கும் சிறப்பாக ஆசிரியன் வரலாற்றை விரித்துக் கூறுவதோடு ஏனையவற்றையுங் கூறுமுறை தொன்று தொட்டே யிருந்திருப்பின் இன்று காணும் இன்னல் பல தமிழாராய்ச்சிக் கிலவெண்க. தொன்னூல்களுக்குப் பாயிரமின்றி இடர்ப்பட்ட தன்மைப் பின்னோர் அறிந்தபிற்பாடு ‘பாயிரமில்லது பனுவ லன்று’ என்று விதித்தனர் போலும். ஈண்டுப் பாயிரம் என்பது சிறப்புப்

பாயிரமாகும். தன்னுசிரியன், தன்னொடு கற்றோன், தன் மாணுக்கன் என்றிவரே சிறப்புப் பாயிரஞ் செய்யத்தக்கார் என்ற முறையொடு பாயிர மில்லா நூல்கட்கும் பாயிரம் அமைப்பான் தகுமுரைகாரனுஞ் செய்யலாம் என்று கூட்டினமை அறியத்தகும்,

"பன்னிய நூற்பேர் பகர்ந்தோன்பேர் காரணமுந்
துன்னு பயனளவுஞ் சொல்லினன் — முன்னைச்
சிறப்பா மவற்றுட் சிலவேறி னுனும்
பெறப்படுமோ முன்னைப் பெயர்" என்ற

நூற்பாப்படி நேமிநாதச் சிறப்புப் பாயிரம் நான்கையே கூறுமென்க. நூற்பா நுதலும் பொருளிது வென முதலில் அறிவுறுத்த நினைந்து, 'நுதலியதறிதல்' என்னும் நூற்புணர்ப்பை முப்பத்திரண்டனுள் முதலாவ தாகத் தொல்காப்பியர் கூறினர்; அதனையொழித்து அவர்கூருத 'நுதலிப் புகுதல்' என்னும் புணர்ப்பைப் பின்னோர் முதலாவதாகக் கொண்டனர்; எடுத்துக்கொண்டபொருள் இனிது முடியவேண்டு மென்று கருதி நூற்கு முன்கடவுள் வணக்கங் கூற வேண்டு மென்ற கருத்து இப்புணர்ப்பால் வலியுறுகின்றது. சங்ககால நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துச் செய்தது இக்கருத்து எழுந்தபின்னர்ப் போலும். தானே தெய்வ வணக்கங் கூறிப் பொருளும் முன்காட்டிப் புகுவராயின், அதுவும் பாயிரம் எனவும், ஆசிரி யனே நூற்குமுன் கூறிக்கொள்ளும் பாயிரத்தைப் பிறராற் கூறப்படுஞ் சிறப்புப்பாயிரத்தினும் வேற்றுமை தோன்றத் 'தற்சிறப்புப் பாயிரம்' எனவும் வழங்கலாயினர். எனவே, பிறராற் கூறப்படும் பாயிரம் நூற்சிறப்புப் பாயிரம் என்ருயிற்று.

உரையாசிரியர்கள் நூற்குமுன் எழுதும் முகவுரையை உரைப் பாயிரம் என்ப. ஆசிரியப்பாவான் ஏனைப்பாயிரஞ் செய்யப்படுதலின் உரைநடையால் எழுதப்படும் இதனை உரைப்பாயிரமென வழங்கலாயினர் எனினும் அமையும். உரையாசிரியர்களையும் உரைகளையும் சிறப்பித்துப் பாடப்படும் பாயிரம் உரைச்சிறப்புப் பாயிரம் எனப்படும்.

பாயிரம் என்னுதலிற்றோ வெளி னென்பதூஉம், பாயிரத்தின் இன்றியமையாமை இது வென்பதூஉம், பாயிரஞ் செய்தாரிவ ரென்ப தூஉம் போல்வன பாயிரத்தின் பாயிரம் எனப்படும். படலத் தொடக்கத்தும், இயற்ருெடக்கத்தும், நூற்பாத் தொடக்கத்தும் ஆண்டாண்டு சுருங்கக் கூறுவனவெல்லாம் பாயிரமேயாம். பாயிரம் என்று தலைப்பிட்டு, வணக்கம், அவையடக்கம், தன்னூற்கு வேண்டுங் கருவி கூறிப் போதுவர் இலக் கணக்கொத்துடையார். நூலென்பது அடிவரையறையில்லன ஆறனுள் ஒன்ருகலின் நூற்குரியபா ஆசிரியப்பாவே யாகும். தொல்காப்பியமும் நன்னூலும் நூற்பாவான் அமைந்தன. நேமிநாதம் வெண்பாவானும்,

பிரயோக விவேகம், வீரசோழியம் என்பன கட்டளைக் கலித்துறையாலும், அமைந்தன. இலக்கண நூற்கு ஆசிரியத்தான் அமைந்த பாவே தக்கது, ஒழுகிய ஓசையும் எளிதிற் றெளிவுந் தருதலின்,

"தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றன் புகழ்த ற்குதி யன்றே" என்பது

தமிழ் முறையாதலின் பிறராற் கூறப்படுஞ் சிறப்புப் பாயிரம் இன்றியமையாததாயிற்று. பிறராற் சிறப்பிக்கப்படுஞ் சொல்லேபுகழ் என்று கருதப்படும். தன்னைத்தானே சிறப்பித்துக்கொள்ளுதல் புகழ்ச்சியின்பாற் படாது. படுமென்பீராயின், இம்மைக்கு இறுதிப்பயன் புகழாகாது, தன்னைத்தானே ஒருவன் சிறப்பித்துக்கொள்ளுதல் எளிதாகலின். தமிழ்மறையாகிய திருக்குறள் புகழை இம்மைப்பயனாகக் கூறலின் பிறராற் சிறப்பிக்கப் படுவதையே புகழ் என்று கருதுவது தமிழ்முறையென்க. பிரயோக விவேகஞ் செய்த சுப்பிரமணிய தீக்கிதர் சிறப்புப்பாயிரந் தாமே செய்து கொண்டார், அவர் ஆரியமுறையைத் தழுவியோராகலின்.

"பெரும் புங்கவர் புகழ் போதாயனி
சுப்பிரமணியன் .... பிரயோக
விவேகந் தன்னைக் கரும்புங் கனியு
மெனப் பாடினான் தமிழ் கற்பவர்க்கே" என்பது

அவர் தாமே செய்துகொண்ட பாயிரம். "இது தன்னைப் பிறன்போலும் நாந்தி கூறுகின்றது; வடநூலார் தாமே பதிகமும் உரையுஞ் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையுஞ் செய்து உதாரணமுங் காட்டினும்" என்பது அவர் கருத்து.

தொல்காப்பியத்துட் பாயிரவிலக்கணம் கூறாமையானும், தாமே படைத்துக்கொண்ட நூற்பாக்களொடு பழைய நூற்பாக்களையும் எடுத்தாள வேண்டுமென்று தாமே விதித்த விதிக் கிலக்கியமாக, 'வினையி னீங்கிய', 'சேரினமணியை', 'ஒருநெறியின்றி' என்று தொடங்கும் மூன்று தொல்காப்பிய நூற்பாக்களைத் தம் பொதுப் பாயிரத்துள் மேற்கோளாகப் பின்னோர் எடுத்துக்கொண்டமையானும், 'நூலெனப்படுவது நுவலுங் காலை முதலும் முடிவு மாறுகோளின்றி', 'ஒத்த சூத்திர முரைப்பின்' என்று தொல்காப்பியர் நூலின் இலக்கணங் கூறிப்போதர, 'நூலி னியல்பே நுவலினோரிரு பாயிரந் தோற்றி' என்று பின்னோர் இலக்கண மிகுத்துக் கொண்டமையானும், பாயிரம் எழுந்ததும் அஃது இருவகைப் படும் என்று பகுத்ததும் தொல்காப்பியர்க்குப் பிற்காலத்தாத லறிக. இறையனாரகப்பொருளுரை, தொல்காப்பியப் பாயிரவுரை, யாப்பருங் கலவுரை என்றின்ன நூல்களுள் பாயிரம் வரிக்கப்படுதலின் அதன் றோற்

றமும் பன்னூ றாண்டுகளுக்கு முன்னதாக லறிக. "அவையெல்லாம் விரித்துரைப்பிற் பெருகும்; முடிந்த நூலிற்கண்டு கொள்க" என்று இறையனாரகப்பொருளுரை கூறியமைந்தமையின், பாயிர விலக்கணங்களை விரித்துக் கூறும் நூலிருந்தமை பெறப்படும். நன்னூல் இருவகைப் பாயிரத்தின்கண் உள்ள நூற்பாக்கள் பல அதற்கு முற்பட்டனவாய இவ்வுரைகளிற் காணப்படுதலானும் அரும்பொருளைந்தனையுமே கூறினரென நன்னூற் சிறப்புப்பாயிரங் கூறுதலானும், அந் நூற்பாத் தொகையைக் குறிக்கும் இருவெண்பாக்களில் பாயிர நூற்பாக்கள் எண்ணப் படாமையானும் பவணந்தியார் பாயிரஞ் செய்திலர் என்று அறியலாம். அவர் பாயிரஞ் செய்திருப்பரேல் பாயிரத் தொடக்கத்துங் கடவுள் வணக்கங் கூறியிருப்பர். அன்றியும் நூல் முதல் வழி சார்பென மூவகைத்து என்றபடி அகத்தியத்திற்குத் தொல்காப்பியம் வழிநூலாயின் நன்னூல் சார்பு நூலாக வேண்டும். பாயிரம் பவணந்தியார் செய்தனரேல் 'முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்று கூற உடன்படுவார் கொல். இவற்றான் பவணந்தியார் பாயிரஞ் செய்ய வில்லை என்பது தெரியவரும். மயிலைநாதர் உரைக்குறிப்புக்களான் பலர் செய்த நூற்பாக்களின் தொகுப்பே அப்பாயிரம் என்று துணியப்படும்.

'நூலினியல்பே' என்ற தொடக்கத்தானும், எழுமதம், முப்பத்திரண்டுத்தி, எல்லை என்றின்ன கூறுவதானும் இலக்கண நூல்களுக்கே பாயிர விலக்கணம் முழுதும் இயைவதாகும். பாயிரம் என்று கருதும் வண்ணம் இலக்கிய நூல்களுள் வந்தன சிலவற்றை ஈண்டு எழுதல் தகும். ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளுட பாயிரத்தினொடு திருக்குறள் கூறுவதாகத் திருவள்ளுவமாலை பாடுகின்றது. ஈண்டுப் பாயிரம் என்பது பொதுப்பாயிரமும் அன்று, ஆக்கியோன் பெயர் முதலியன 'இன்மையின் தாமே பாயிரங் கூறினமையின் சிறப்புப் பாயிரமு மன்று. நூற்பொருளை முன்தந்து கூறியமையின் நூற்பாயிரம் எனப் பெயர் பெறும்.

"உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" என்று

சிலப்பதிகாரத்தும்,

"இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்" என்று

மணிமேகலை யகத்தும் பதிகம் என்று முனனுரைக்கப் படுவன சிறப்புப் பாயிரத்தைப் போன்றன. இப்பதிகங்களும் சீவகசிந்தாமணியிற் கூறப்படும் பதிகமும் நூற் பொருளைத் தொகுத்துக்காட்டுவன.

ஓம்:

சங்க இலக்கியங்களிற் கண்ட தமிழர் நாகரிகம்

S. Venkataraman

1. தோற்றுவாய்.

உலகின்கண் விளங்கும் அலகில் பன்னாடுகளினும் அமிழ்தினும் இனிய தமிழ் பயில் தென்னாடு நாகரிகத்தால் முற்பட்டதென்பது ஆராய்ச்சி யாளர் பலர்க்கும் ஒப்ப முடிந்ததாகும். அத்தகைய தென்னாட்டில் வாழ்ந்த பண்டைக்காலத் தண்டமிழ் மக்களின் நாகரிகத்தை அகச்சான்று கொண்டு துணிந்து கூறவேண்டுமாயின், அத்தமிழ் மக்களுள் புலத்துறை முற்றிய நலத்தகையாளர் செய்த இலக்கியங்களே தக்க துணையாகும். அவ்விலக்கியங்களுள் மிகத் தொன்மை வாய்ந்தனவாய்ப் பண்டைத் தமிழ் மக்களின் இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாய் விளங்குவன சங்க இலக்கியங்களேயாம். துங்கச் செந்தமிழ்ச் சங்கத்திருந்து வான்றோய் நல்லிசைச் சான்றோர் பலரும் தீதற விளங்கிய தம் மூதறிவான் தமிழா ராய்ந்த இறுதிக்காலம், ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தாகும் என்பது ஆராய்ச்சி வல்லுநர் துணிபு. அச்சங்க கால இலக்கியங் களிலுள்ள தமிழர் நாகரிகத்தை யாராய்ந்தறிவது, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழர் நாகரித்தை யறிந்ததேயாகும். இங்ஙனம் சங்க இலக்கியங்களிற் கண்ட தமிழர் நாகரிகத்தை யாராய்வது தமிழ் நாட்டிற் பிறந்த தமிழ்ப்பற்றுடைய தமிழறிஞர்கட்கு உவப்பைத் தரும் என்பது கருதியே இவ்வாராய்ச்சியைத் தொடங்குகின்றேன்.

'சங்க இலக்கியங்கள்' எனப்படுவன யாவை யெனக் காணுறின் அவை: பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களு மென்ப. எனினும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்க காலத்துச் செய்யப்பட்டன வென்பதில் கருத்து வேற்றுமைகள் உள்ளன. ஆராய்ச்சியாளர் பலரானும் சங்க இலக்கியங்களென்று ஒருதலையாக ஒப்புக் கொள்ளப்படுவன, பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமேயாகும். ஆதலின், அப்பாட்டினும் தொகையினும் கண்ட தமிழர் நாகரிகத்தையே யீண்டா ராய்வாம்.

தமிழர் நாகரிகத்தை யாராய்வதற்கு முன்னர் 'நாகரிகம்' என்ற சொற்குப் பொருளறிய வேண்டுவது இன்றியமையாத தொன்று. நாகரிகம் என்னுஞ் சொல் நம் பண்டைத் தமிழிலக்கியங்களில் யாண்டேனும் வழங்கப்

பட்டிருக்கின்றதோவென ஆராயின், தெய்வத் திருமறையாய திருக்குற ளின்கண்,

"பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" எனவும்

கற்றோர் புகழும் நற்றிணைக்கண்,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனி நாகரிகர்" எனவும்

இருபெரு நூல்களில் இயம்பப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். இவ்விரண்டு நூலினும் "நாகரிகம்" என்ற சொல் கண்ணோட்டம் என்னும் பொருளதேயாம். ஆயின் இங்கு 'நாகரிகம்' என்று குறித்தது அக்கண்ணோட்டத்தை யன்று, மக்களின் திருந்திய நிலைமையினையே யாகும். நாட்டில் வாழ்ந்த மக்களைவிட நகரின்கண் வாழ்ந்த மக்கள் திருந்திய நிலையினராய் இருந்தமையின் அத்தன்மையை 'நாகரிகம்' என நகரத் தொடர்புடையது என்ற பொருளில் வழங்குப. இந் நாகரிகம் என்ற சொல் இப்பொருளில் வழங்கப்படுவது சங்கநூல்களிலின்றாயினும் பிற்காலத்துக் கொங்குவேளிர், தாம் செய்த பெருங்கதையின்கண், "நலங்கவின் கொண்ட நனிநாகரிகத், தம் மென் சாயலரிவை மகளிர்" என வழங்கியிருக்கின்றார். இந்நூலுக்கு அரும்பதஉரை வரைந்த நல்லிசைப்புலவராய சாமிநாதையரவர்களும் நாகரிகம் என்பதற்குத் திருத்தம், எனப் பொருளெழுதி யுள்ளார். ஆண்டுக்காண்க.

இனிச் சங்க இலக்கியங்களிற் கண்ட தமிழர் நாகரிகத்தை : கடவுன் வழிபாடு, கலைகள், ஆள்வினையுஞ் செல்வமும், அரசியல், வீரம், கொடை புலவர்நிலை, காதல் வாழ்க்கை, மணமுறை, ஒழுக்கம், தொழில், விளையாட்வகை, ஆடையணி முதலியன, என வகைப்படுத்திக்கொண்டு முதற்கண் கடவுள் வழிபாட்டை யாராய்வாம்.

பண்டைத்தமிழர் கடவுள் வழிபாடு.

உலகத்தையும் உலகத்திலுள்ள உயிர்ப் பன்மையையும் ஆக்கியளித்தழிக்கவல்ல பேராற்றலும் பேரறிவுமுடைய கடவுள் ஒருவர் உளரென்பது அறிஞர் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. மக்களாகப் பிறந்தவர் அக்கடவுளை வழிபட்டால் இப்பிறப்பில் எய்தற்பாலவாய நன்மைகளையும் மறுமைக்கணெய்தற்பாலதாய அழியா வீட்டின்பத்தையும் எய்தலாமென்பதும் அவர் முடிபேயாகும். இங்ஙனம் இருமையினும் நன்மை பயக்கத்தக்க கடவுள் வழிபாட்டில் பண்டைத் தமிழ் மக்கள் யாங்ஙனம் சிறப்புற்றிருந்தார்கள் என்பதைக் காண்பாம்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் நில வட்டத்தை நான்காகப் பகுத்து மலையையும் மலைசார்ந்த இடத்தையும் முருகனுக்கும், காடும் காடு சார்ந்த இடமும் திருமாலுக்கும், வயலும் வயல் சார்ந்த இடமும் இந்திரனுக்கும், கடலும் கடல்சார்ந்த இடமும் வருணனுக்கும் உரிய இடங்களாகக் கூறியிருக்கின்றார். இதை நோக்குழி எவ்விடத்தினும் தெய்வமின்றி யிருக்க முடியா தென்பதே பண்டைத் தமிழர் கொள்கையாதல் நன்கு விளங்கும். ஒவ்வொரு நிலத்தினும் வாழ்ந்தவர்கள் அவ்வந் நிலத்திற்குரிய தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள். எனினும், எல்லா நிலத்து மக்கட்கும் பொதுவாகவும் எல்லாத் தெய்வங்கட்கும் தலைமையாகவும் சிவன் என்ற பெயருடைய கடவுளைக் கொண்டு வழிபட்டு வந்தார்கள் என்று தோன்றுகின்றது.

“நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகவிசும் போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் தலைவனாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவினிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபினுயர் பலிகொடுமார்
அந்தி விழவிற் றாரியங் கறங்க” எனவரும்,

மதுரைக் காஞ்சியடிகளில்: குற்றமற விளங்கிய ஒளிவாய்ந்த யாக்கையையும் வாடாப் பூவையும் நாற்றத்தை யுணவாகக் கொள்ளுமியல்பையுமுடைய தெய்வங்களுக்கு உயர்ந்த பலிகொடுப்பதற்காக அந்திகாலத்துச் செய்யும் விழவில் தூரியங்கறங்க, என்று சொல்லவந்த ஆசிரியர் மாங்குடி மருதனார் “நீரும் நிலனும் தீயும் வளியும், மாகவிசும் போடைந்துட னியற்றிய, மழுவாணெடி யோன்றலைவனாக” என்று கூறியிருத்தல் காண்க. இதனுன் மழுவாணெடியோனாகிய சிவபெருமானே விண்ணும் மண்ணும் நெருப்பும் நீரும் காற்றுமாகிய ஐந்து பூதங்களையும் இயற்றினவனென்பதும் அவனேயெல்லாத தெய்வங்கட்குந் தலைமையானவன் என்பதும் நன்கு விளங்குதல் காண்க. சிவபெருமானே மூன்றுலகங்களையும் உண்டாக்கினான் என்பதை,

“நீலமேனி வாலிழை பாகத்
தொருவ னிருதாணிழற் கீழ்
மூவகை யுலகமு முகிழ்த்தன முறையே” எனவரும்

ஐங்குறு நூற்றுக் காப்புச் செய்யுளான் நன்குணரலாம். இதன்கண் சிவபெருமான் நீலநிறத்தையுடைய உமையைப் பாகத்துக் கொண்டுளான்

என்றது: உலக நிகழ்ச்சிகளனைத்தும் நீரும் நெருப்புமின்றி நிகழா; ஆகவே இத்தகைய உலக நிகழ்ச்சிகளனைத்திற்கும் காரணனுயுள்ள கடவுள் நெருப்பின் நிறமாய செந்நிறத்தைத் தன்னிறமாகக் கொண்டும், நீரின் றன்மையாய தண்மையொடு கூடிய நீல நிறத்தையுடைய அருளுருவாய அம்மையைப் பாகத்தில் கொண்டும் செம்மையுங் கருமையும் கலந்த உருவமுடையவனாக இருக்கின்றான் என்னும் கருத்தினது. ஆணும் பெண்ணுமாக அமைந்துள்ள இவ்வுலகத்திற்குக் காரணனாக உள்ள கடவுள் அவ்வாண்கூறும் பெண்கூறும் உடையவனாகவே யிருக்கவேண்டும் என்று கொண்ட தமிழர் நுண்ணறிவை யென்னென்று வியப்பது !

இனிச் சிவபெருமான் இமையமலையை வில்லாக வளைத்தான்; குளிர்ந்த சடையுடையவன்; உமையோடு உயரிய மலையிலிருந்தான் என்று தமிழர் கொண்டிருந்தார்கள் என்பதை,—

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தணன்
உமையமர்ந் துயர் மலையிருந்தனனாக" (கலி. 38)

என்ற அடிகளாலுணரலாம். அச்சிவபெருமானே வேதங்களை விளம்பினார் கங்கையைச் சடைக்கண் கரந்துள்ளார்; திரிபுரமெரித்தார்; கூளி சுற்றத்தை யுடையவர்; நீலகண்டத்தை யுடையவர்; எட்டுக் கைகளையுடையவர் என்று நம்பழந் தமிழர்கள் கொண்டு போற்றினர்க ளென்பதை,—

"ஆற்றி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறு நீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக
கூறுமடற் குறித்த தன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப் போர் மணிமிடற் றெண்கையாய்" எனவரும்

கலித்தொகைக் காப்புச் செய்யுளடிகளானுணரலாம். சிவபெருமான் கூத்தாடு மியல்பினை யுடையவர்; அவர் எளிய செயலுக்கு மகிழ்ந்து கூத்தாடும் சிற்றறிவினரைப் போலாது பிறதெய்வங்கள் செய்யாத அரிய பெரிய செயலைச் செய்து முடித்த பின்னர்க் கூத்தாடுத லவரியல்பு. அவராடுங் கூத்துக்களுள் 'கொடு கொட்டி' என்று ஒரு கூத்துளது; அக்கூத்தை, எல்லாவற்றையும் அழித்து நின்றாடுவார்; அவர் அங்ஙனமாடுங்கால் அங்கு பங்கினுறையும் மங்கை யொழியப் பிறரின்மையின் அவ்வுமையவளே அக்கூத்திற்கேற்ற தாளத்தைப் போடுவாளோ? என்ற கருத்தமைய "கொடு கொட்டி யாடுங்கால் கொண்டசீர் தருவாளோ" என்ற அடியை நல்லந்துவனார் நவின்றிருத்தல் காண்க. எல்லாவற்றையும் படைத்த சிவ பெருமானே அவற்றை யழித்து நின்றாடுவார் என்றியம்பியிருத்தலின், அச்சிவபெருமானல்லாத பிறதேவர்களெல்லாம் அழியு மியல்பினர் என்பது

பெறப்படுதல் காண்க. இனி, அவராடிய 'பாண்டரங்கம்' எனப் பெரிய கூத்து முப்புர மெரித்து எரிந்த நீற்றை யணிந்து நின்றுடியது. எல்லா வுயிரையு மீன்றளித்தழிக்கு மிறைவன், எல்லாவுயிரிடத்தும் ஒத்த அருளுடையனுதல் இயல்பாயிருக்க ஒருசாரார்மாட்டருளுடையனுய் மற்றொரு சாரார்மாட்டருளிலனுய் முப்புர மெரித்தது யாது காரணம்பற்றி யெனின்? அம்முப்புரத்தின் கண்ணுள்ள அவுணர்கள் தங்கள் மெய்வலி யால் அமரரையழிக்க முயன்றமையின், அவ்வவுணரொடு அமர்செய்யும் ஆற்றலிலாத அலருறை வாழ்க்கை யயன் முதலாய அமரர் அவ்வவுணர் செய்யும் வஞ்சனைகளைக் கூறி அவரை வலிசாய்க்க வேண்டுமெனச் சிவனை வேண்டினுர்கள்; அவர் வேண்டினமையின் வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கும் இறைவன் கூற்றெனச் சினந்து முப்புரத்தை யெரித்தார்; என்ற வரலாற்றை—

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர் வந்திரத்தலின்
மடங்கல் போல் சினைஇ மாயஞ்செய் யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணுன் மூவெயிலு
முடன்றக்கால் முகம்போல" எனவும்,

"ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயிலுடற்றி," எனவும்,

வரும் கலித்தொகை யடிகளானுணரலாம். இதனுன் இடையூறு நிகழ்ந்துழி அதை நீக்குமியல்பு கூறினமையின், அளித்தல் தன்மை கூறினுர் என்க.

இனி, கபாலம் என்னுங் கூத்தும் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுட்கே யுரியது. இக்கூத்து அயனுடைய தலையைக் கிள்ளி அகங்கை கொண்டு ஆடியதாகும். இங்ஙனமெல்லாங் கூத்தாடு மியல்பினர் சிவபிரான் என்பதை நன்கு நவின்றனர் நல்லந்துவனுர்.

"கண்ணி கார் நறுங் கொன்றை" என்று தொடங்கும் புறநானூற்றுக் காப்புச் செய்யுளில்: சிவபிரானுக்குச் சிறந்தமாலை கொன்றை யாகும்; அவனூர்தியும் கொடியும் வெள் விடையாகும்; நஞ்சை மிடற்றின் கண் அணிந்திருப்பவர்; அங்ஙனம் அணிந்தது உலகைக் காத்தற்காகலின் அந்நஞ்சணிந்த கறையை மறையுணர் மறையவர் துதிப்பார்; பெண்ணொரு புடை கொள்வார்; அப்பெண்ணைத் தன்னுளடக்கி மறைத்தலுஞ் செய்வார்; நெற்றியிற் பிறையணிந்தவர்; அவரணிந்த பிறையைப் பதினெண் தேவர் களும் துதிப்பார்கள்; நீர்நீங்காக் கரகத்தைக் கையில் தாங்கி யிருப்பார்; தாழ்ந்த சடையை யுடையார்; அருந்தவத்தினர்; எல்லா வுலகுக்கும் காவலாக இருப்பவர் என்ற பொருளமைந்திருத்தல் காண்க. அறத்தினை

நீங்காது நிற்பவர் என்ற கருத்து விளங்கத் தூயவெள்விடையை யூர்தி யாகக் கொண்டார் எனவும், உயிர்களைக் காத்தலே தம்கடமை என்பது விளங்க ஒருவரும் உண்ணாத நஞ்சமுண்டு நீலகண்டராயிருந்தாரெனவும், பெரிய பிழை செய்த சிறியவரும் தன்மாட்டன்புடையராய் வந்து வணங்கின் அவர் பிழை பொறுத்து அருள் செய்தல் தம்க்கியல்பென்பதை யறிவிக்கவும், தாம் ஞானத்தை யுடையவர் ஞானத்தால் வணங்கத்தக்கவர் என்பதை யுணர்த்தவும் மூன்றும் பிறையை யவரணிந்திருக்கின்றா ரெனவும் கொண்டு தமிழர்கள் வணங்கினர்கள் சிவபிரானை. இங்ஙனம் உயரிய கருத்துக்களமையச் சிவபிரானைத் துதிசெய்த தமிழர் நுண்ணறிவை நோக்கின் வியத்தலும் நயத்தலுஞ் செய்யாதார் யாவர்?

சிவபிரான் ஆலின்கீழ் அமர்ந்திருத்தல் இயல்பென்பதும் அக்காலத் துத் தம் கையின்கண்ணிருந்த கரகத்தை அம்மரக்கிளையில் தொங்கவிட் டிருப்பார் என்பதும் பின்வரும் கலித்தொகையடிகளா னுணரத்தக்கன.—

"சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்ந்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழை"
"ஆலமர் செல்வன்"

என்றல் காண்க.

முழுமுதற் கடவுளாய சிவபெருமான் மெய்யறிவினை நல்குதற்பொருட்டு ஆலமரத்தடியில் தென்றிசை யிறைவனாய் (தக்கணாமூர்த்தியாய்) இருத்தல் அவனருள் விளையாட்டுள் ஒன்றுபோலும்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் செவியறிவுறுக்கும் பொழுது,—

"பணியியரத்தை நின்குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே"

என்று கூறியிருக்கின்றார். இதன்கண் முக்கண்ணனே முழுமுதற் கடவுளென் பதை யறிந்து பிறதெய்வங்களை வணங்காது அப்பிறவாயாக்கைப் பெரியோனை வணங்கி அவன் கோயிலை வலஞ்செய்வதற்கு நின்குடை பணிவ தாக என்றியம்பி யிருத்தலின் சிவபிரான் முழுமுதற் கடவுள் என்பதை யுணரலாம்.

"நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நல் மொழி யாயும்"

(சிறுபாண்)

எனவரு மடிகளில்: ஆய் என்னும் வள்ளல் தனக்கருமையாகக் கிடைத்த அரிய பெரிய கலிங்கத்தைத் தான் அணிதல் தகாதென்று கருதி முழு முதற்கடவுளே யிதை யணிதற்குரியவனென ஆலமர் செல்வனாகிய சிவ பெருமானுக்கு அணிந்த தன்மையை வியந்து கூறினார் நத்தத்தனார்.

நன்னன் சேய் நன்னன் வணங்கிய கடவுள் சிவபிரானே யென்பதும் அவர் காரியுண்டிக் கடவுள் என்ற பெயரோடு நவிரமலையில் விரும்பி யிருந்தார் என்பதும் கீழ்வரும் மலைபடுகடாத்து அடிகளா னுணரத்தக்கன—

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேரிசை நவிர மேஎ யுறையும்
காரியுண்டிக் கடவுளதியற்கையும்"

என வருதல் காண்க. இறைவனுடைய அருவுருவ வடிவத்தை வடநூலோர் 'இலிங்கம்,' என்று குறித்ததுபோலச் சங்கநூற் சான்றோர்கள் 'கந்து,' என் னுஞ் சொல்லாற் சுட்டியதாகத் தெரிகின்றது. பட்டினப்பாலையில் கரிகால னால் அழிக்கப்பட்ட ஊர்களைப் பற்றிக் கூறுமிடத்து :—

"கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர்ச் சேக்குங் கந்துடைப் பொதியிற்
பருநிலை நெடுந்தூ ணொல்கத் தீண்டிப்
பெருநிலை யானையொடு பிடிபுணர்ந் தியலவும்"

என்று கூறியிருத்தல் காண்க. இதனால் புதியவர் பலரும் வணங்கத்தக்க பொதியில் இருந்ததென்பதும், அப்பொதியிலின்கண் பெரிய நெடிய தறி யொன்று நட்டிருக்குமென்பதும் அதன்கண் தெய்வமுறையும் என்பதும் அதனை அனைவரும் வணங்குவார்கள் என்பதும் அறியலாம். இச்சிவ பிரானை அருந்தவத்தோன், ஆதிரை முதல்வன், ஆலமர் செல்வன், ஆனேற் றுக் கொடியோன், கொன்றையலங்கலந் தெரியலான், சீறரு முன்பினோன் செல்விடைப் பாகன், புதுத்திங்கட்கண்ணியான், பைங்கட்பார்ப்பான், மணி மிடற்றெண்கையான், மழுவாள் நெடியோன், முக்கட் செல்வன் எனப் பல் வகைப் பெயரான் சங்கப்புலவர்கள் புகழ்ந்து போற்றியுள்ளார்கள்.

இதுகாறுங் கூறிய வாற்றான் சிவபிரான் பண்டைக்காலத்து எல்லாராலும் முழுமுதற்கடவுளாகக் கொண்டு வணங்கப்பட்டார் என்ப துணரலாம்.

முருகன்.

இனி, அச்சிவபிரான் திருமகன் என்று சொல்லப்படும் முருகன் வழிபாட்டைப்பற்றிக் காண்பாம். நானிலத்துள் உயர்ந்த தன்மையதாய குறிஞ்சி முருகனுக்குரிய தென்பது முன்னங் கூறப்பட்டது. அக்குறிஞ் சிக் கிழவனாகிய குமரன் வணக்கம் சங்க இலக்கியங்களில் பலபடியாகப் பகரப்பட்டிருக்கின்றது.

"மறுமிடற்றண்ணற்கு மாசிலோள் தந்த
கடம்பமர் செல்வன் கடிநகர்" (பரி. 8)
"ஆலமர் செல்வனணிசால் மகன்" (கலி. 83)

என வருமடிகளான் நீலகண்டப்பிரானுக்கு உமையவள் பயந்த பிள்ளையே முருகன் என்பதை யுணரலாம். ஞாயிறு பசிய கடலின்கண் செவ்வொளி யோடு தோன்றி இருளைக் கெடுக்கு மாறுபோல முருகப்பெருமான் பசிய மயிலின் மேற்றோன்றித்தன்னை மனத்தால் நோக்குவாருடைய மனஇருளைக் கெடுப்பான் என்பதும், அம்முருகனுடைய ஒளியுருவம், தன்னைக் கட்புல னல் நோக்குவாருடைய இருவகை யிந்திரியங்களும் (அறிதற் கருவிகளும் செயற் கருவிகளும்) தாம் செல்லுதற்குரிய பொருள்கண்மேல் செல்லாதபடி இமைத்துப் பார்த்தற்குக் காரணமாக நோக்குவார் கண்ணிடங்களெல்லா வற்றினும் சென்று விளங்குகின்ற இயல்பின தென்பதும் தமிழர் கொள்கை யாதலைப் பின்வரும் திருமுருகாற்றுப்படையடிகள் விளக்குகின்றன.

"உலகமுவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங்கவிரொளி"

என்பது காண்க. இனி முருகன் அறுவகைமுகனும் ஆறிருதோளும் உடையவன் என்பதும் அம்முருகாற்றுப்படையா லுணரலாம். அவ்வறு வகை முகங்களும் செய்யுந் தொழில்கள் ஆறுருகும். அவை:—

1. பெருமையுடைத்தாய் இருண்ட உலகம் குற்றமின்றி விளங்கும்படி பல கிரணங்களையுந் தோற்றுவித்தல்.

2. தன்மாட்டன்புடையார் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க்கு இனி தாக நடந்து அவர் மேற் சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும் வரங்களைக் கொடுத்தல்.

3. மந்திரநூலுள் விதிக்கப்பட்ட முறைமை தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்குவாராதபடி நினைத்தல்.

4. ஈண்டு வழங்காத வேதங்களிலும் நூல்களிலுமுள்ள நுண்பொருள் களை யாராய்ந்து இருடிகள் ஏமமுறும்படி யுணர்த்தித் திங்கள்போலத் திசைகளை விளக்குதல்.

5. நடுவுநிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்ல வேண்டுமென்று கறுவுதல்கொண்ட திருவுள்ளத்தோடே செறப்படும் அசுரர் முதலியோ ரைப் பொன்றக் கெடுத்துக் களவேள்வி வேட்டல்.

6. குறவர் மடமகளாகிய கொடியன இடையுடை வள்ளியுடனே மகிழ்ச்சிகொள்ளுதல். என்பன. இம்முகங்களுக்கேற்பப் பன்னிரண்டு

கைகளும் தொழில் செய்கின்றன என்று கூறப்பட்டிருக்கின்றது. இங்குக் கூறப்பட்ட தொழில்கள் யாவும் உலகநிகழ்ச்சிக்கு யோரிடையூறின்றி நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தோடே யியற்றப்படுதல் காண்க.

கண்ணிரண்டிருப்பினும் வேறுவேறு பொருள்களை யொருகாலத்துக் காணுவாக, முருகனுடைய ஆறுமுகங்களும் அறுவேறு தொழில்களை யியற்றின என்றல் யாங்ஙனம் பொருந்துமெனின்? இவ்வாராய்ச்சி எல்லாம் வல்ல இறைவனிடத்துப் பொருந்தாதென்க. இன்றேல் முருகன் அறுமுகமுடையவன் என்பது உருவகமெனினுமமையும்.

இத்தகைய பெருமை வாய்ந்த முருகப்பெருமான் பிறருக்கு அச்சத்தை விளைவிக்கும் அவுணர் தமக்குக் காவலாகப் பொருந்தச்செய்த சூர்மாவைக் கடலின்கண் சென்று கொன்றான் என்று ஒரு வரலாறு கேட்கப்படுகின்றது இதனை—

"மாக்கடன் முன்னி, யணங்குடையவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுதறடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு"

எனப் பதிற்றுப்பத்திலும்,

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படர்புக்குச்
சேயுயர்பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கித்
தீயழலுவைப்பத் திரியவிட்டெறிந்து
நோயுடை நுடங்கு சூர்மாமுதறடிந்து"

எனப் பரிபாடலினும்,

"அவுணர் நல்வலமடங்கக் கவிழிணர்
மாமுதறடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"

எனத் திருமுருகாற்றுப் படையினும் கூறப்படுதல் காண்க. இதுபோலவே கிரவுஞ்சம் என்னும் பெயருடைய குன்றத்தைப் பிளந்தமையுங் கேட்கப்படுகின்றது.

"புள்ளொடு பெயரிய பொருப்பிடை திறந்த வேல்"

எனப் பரிபாடலினும் (21)

"குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ"

எனத் திருமுகாற்றுப் படையினுங் கூறப்படுதல் காண்க. இனி அம்முருகப் பெருமான் உவந்துறையும் இடங்களாகக் கூறப்படுவன வருமாறு:-

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், என்ற தலங்களினும் தணிகையாதி குன்றங்கள் எல்லாவற்றினும்,

"ஊருர்:கொண்ட சீர் கெழுவிழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடுங் காவும் கவின் பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
... ...
வேண்டினர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே" என்று

கூறப்படும் பல்வகை யிடங்களினும் இருப்பர் எனக் கூறப்படுதல் காண்க. யாண்டு யாண்டு அழகும் அமைதியும் அமைந்திருக்கின்றதோ ஆண்டாண்டு முருகனுறைவான் என்பது தமிழர் கொள்கையாதல் காண்க. இத்தகைய இடங்களினன்றி யிறைவனை மன வொருமையோடு இறைஞ்சுதல் இயலாமையும் ஈண் டுணர்தற் குரியது.

இனிக், குறிஞ்சி நிலமக்கள் தம்முடைய நிலைமைக்கேற்ப முருகனை வழிபட்டார்கள். இவ்வழிபாட்டையே வெறியாட்டு என விளம்புவர். இவ் வெறியாட்டுச் சங்க இலக்கியங்களில் பலவிடங்களில் பகரப்பட்டிருக்கின்றது. பொக்கமில் புலவராய நக்கீரனூர் தாமியற்றிய திரு முருகாற்றுப் படையுள் குறமகளாடிய வெறியாட்டைப்பற்றி விரித்துக் கூறியுள்ளார். வெறியாட்டு ஆடுமிடத்தில் கோழிக்கொடி கட்டி நெய்யொடு விராய வெண் சிறுகடுகை யப்பித் தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றுமல் உச் சரித்து வழிபட்டு அழகிய மலர்களைத்தூவி, தம்மில் மாறுபாடு கொண்ட வடிவினையுடைய இரண்டு ஆடைகளை யுள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்துச் சிவந்த நூலைக் கையிலே காப்பாகக் கட்டி வெண்பொரி சிதறி மிக்கவலி நிலைபெற்ற பெரியகாலையுடைய கொழுத்த கிடாயினது குருதி யோடே பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டுப் பலபிரப்பும் வைத்துச் சிறிய பசிய மஞ்சளோடே நறிய சந்தன முதலியவற்றையும் தெளித்துப் பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையினையும் பிற நறிய குளிர்ந்த மாலைகளையும் தமக்கொப்பில்லாதபடி யசையத் தொங்கச்செய்து, செறிந்த மலைப்பக்கத்திலுள்ள ஊர்களை வாழ்த்தி நறிய புகை கொடுத்து அந்நிலத்திற் கேற்ற குறிஞ்சிப் பண்ணைப்பாடி முழங்குகின்ற ஓசையையுடைய அருவி யோடே இனியபல வாச்சியங்களும் ஒலியாநிற்க செந்நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி, அச்சம் வரும்படி குருதி விராய சிவந்த தினையினையும் பரப்பிக் குறச் சாதிப் பெண் முருகனுவக்கும் வாச்சியங்களை வாசிக்கப் பண்ணித் தெய்வமின் றென்பார் அஞ்சும்படி முருகன் வரும்படி வழிப்

படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியை யுடைய நகர்; என்ற கரு. தமைந்த—

" மாண்டலைக் கொடியொடு மண்ணிய மைவர " என்பதுமுதல்
" முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர் " என்னும்
அடிவரையுள்ள அடிகளா னதனை யுணர்க.

இக்காலத்துக் கோயிலின்கண் அந்தணர்களால் செய்யப் படுகின்ற துவஜாரோகணம் (கொடியேற்றுதல்) ஆவாகனம் (இறைவன் மனத்தினின்று வெளிப்படுவதாக ஊன்றி நினைத்தல் ஆவது முருகாற்றுப்படுத்தல்) பாவாடை போடுதல், (பல் பிரப்பிடுதல்) தூபம் (புகை) போடுதல், ஆசீர் வாதம், (வாழ்த்து) கூறுதல் முதலியன பண்டைத் தமிழ்நாட்டில் மலை வாழ்நராகிய குறவர்மாட்டும் இருந்ததாக நாம் அறிகின்றோம் ஆதலின், இக் கோயில் நிகழ்ச்சிகள் யாவும் ஆரியர்மாட்டுக் கற்றுக் கொண்டார்கள் தமிழர்கள் என்பது பொருந்தாக் கூற்றாய்ப் பொய்படும் என்பது கூற வேண்டாவாம்.

" என்னுள் வருதியோ நன்னடைக் கொடிச்சி
முருகு புணர்ந்தியன்ற வள்ளி போலநின்
னுருவு கண்ணெறிப்ப நோக்க லாற்றலனே "

என்ற அடிகளில்: தலைவியினழகைப் புகழ்ந்து கூறுந் தலைவன், " முருகு புணர்ந் தியன்ற வள்ளிபோல நின்னுருவு கண்ணெறிப்ப நோக்க லாற்ற லனே " என்று கூறுவதால் முருகனாகிய தெய்வம் ஏறிய பெண் வள்ளி யெனப் படுவாள் என்பதும் அவள் அங்ஙனம் ஆவேசங் கொண்டவிடத்து அவளுருவம் ஒளிவீசும் என்பதும் அறியக்கிடக்கின்றன.

இனி, இவ்வெறியாட்டுப் பெரும்பாலும், களவிற் புணர்ந்த காரி கையார் வேறுபாட்டிற்குக் காரணம் பேய்க் கோட்பட்டது என முதியோர் கருதிய வழியே நிகழ்வதாகக் காணப் படுகின்றது.

" கான் கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென வறியா மறுவரற் பொழுதில்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
முதுவாய்ப் பெண்டி ரதுவாய்க் கூறக்
களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து

உருவச் செந்திணைக் குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்."

எனவரும் அகநானூற்றடிகளில்: தலைவன் மார்பு வருத்திய வருத்தத்தை இதுவென வறியாது கலங்கும்பொழுது, முருகனுக்கு வெறியாட்டயரத் தணிவானெனக் கட்டுவிச்சி கூற வெறியாட்டயர்ந்தார்கள் என்ற கருத்து விளங்குதல் காண்க. வெறியாட்டு நிகழ்த்தினால் நோய் தீரும் எனப் பண்டைக்காலத்துக் கொண்டிருந்த கொள்கை உண்மையேயாயினும் காம நோய்ப் பட்டவர்களிடத்தும் இவ்வெறி யாட்டயர்ந்த வழி நோய் தீரும் என்று வேலன் கூறுவது பொய்மை யாகும் என்பதை அகத்தைப் பற்றிக் கூறும் நூல்களிற் பரக்கக் காணலாம்.

" வெறியென வுணர்ந்த வேலனேய் மருந்து
அறியா னுகுத லன்னை காணிய ... ...
... ...
வாரற்க தில்ல ... ...
இலங்கு மலை நாட னிரவினானே."

எனவரும் குறுந்தொகைச் செய்யுள் (360) அடிகளில்: வெறியாடினால் நோய்தீரும் எனக் கூறிய வேலன் மொழி பொய்: அவன் நோய்க்குரிய மருந்தறியாதவன் என்பதை அன்னைகாணும் வண்ணம் தலைவன் இன்றிரவு வாராதிருப்பானாக; எனத் தோழி வேண்டுகின்றாள். தலைவன் வருவானேல் அவனைக் கண் ணுற்றமையின் தலைவியின் நோய் தணியும், தணியவே இது வெறியாடின மையால் தணிந்தது என்று அன்னை கருதுவாள். அவள் அங்ஙனம் கருதாது வேலன் பொய்ம்மையை யுணர்வாளாக; என்ற கருத்தமைந்திருத்தல் காண்க. இங்ஙனம் பொய்ம்மையாக வெறியாட்டு இயற்றவும் வேலன் வருகின்றான் என்பதற்காக வேலனை வெறுத்துத் தோழி, " கடவுளாயினு மாக, மடவைமன்ற வாழிய முருகே" எனக் கூறுவதாக நற்றிணையில் காணப்படுகின்றது.

இனி, முருகனை வழிபடத் திருப்பரங்குன்றத்திற்குச் செல்ப வர்கள் பல்வகைச் சந்தனம், நறும்புகை வளியால் விளியா விளக்கு, நறு மணமலர், இசையுறு முழவம், மணி, கயிறு, மயில், குடாரி, யானை, இவை களை யேந்திக்கொண்டு சென்று முருகனுக் குரிமையாக்கித் தொழு வார்கள் என்பதை—

" வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்
ஆறு செல்வளியி னவியா விளக்கமும்
நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்
மணியுங் கயிறும் மயிலுங் குடாரியும்

பிணிமுக முளப்படப் பிறவு மேந்தி
அருவரை சேரத் தொழுநர்" (பரி. 8.)

என்ற அடிகள் அறிவுறுத்துகின்றன. இதன்கண்: "பிணிமுக முளப் படப் பிறவு மேந்தி" என்றமையின், யானை மயில் முதலிய மண்ணானும் மரத்தானும் செய்த உருவங்களையே யேந்திச் சென்றார்கள் என்பதை யுணரலாம்.

மக்கள் அடைய விரும்பும் பயன்களை யெல்லாம் முருகப் பெருமானை வேண்டிப் பெறுதல் இயல்பாக இருந்திருக்கின்றது. தலைவர்களைப் பிரிந்து தனித்தில்லிருக்கும் தலைவியர்கள் தம் கனவின்கண் தலைவர் தம்மைத் தொட்டதாகக் கண்டவர்கள், நனவின்கண் அறியாது அயர்ந்து முருகப்பெருமானை வணங்கி வரங் கேட்கின்றார்கள். இதனை—

"கனவிற் றொட்டது கைபிழையாது
நனவிற் சேப்ப நின்னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங் கொள் வோரும்" (பரி. 8.)

என்ற அடிகளானுணரலாம். இதன்கண் தலைவியர்கள், முருகனிடத்துச் சென்று எம்மை யெம்கணவர் கனவின்கண் தொட்டது பிழையாது நனவின்கண்ணே யெம்பால் அன்பால் தங்குமாறு, நின்வையை யாறு புதுப் புனலால் பொலிவதாக; என்று வரங் கேட்குந் தன்மை யமைந்திருத்தல் காண்க.

பெண்டிர் தமக்குப் பிள்ளைப் பேறு வேண்டுமாயின் முருகன் கோயிலில் சென்று எம்வயிற்றின்கண் கருவுறுவதாக வென்றும், உற்றால் இன்னது செய்வோம் என்றும் கூறிக் கொள்ளுதல் இயல்பென்று தோன்றுகின்றது.

"கருவயி றுறு கெனக் கடம்படுவோரும்" (பரி. 8)

என்பது காண்க. இங்ஙனம் வேண்டிக் கொண்டவர்கள், பிள்ளைப் பேற்றைப் பெற்றிருந்தார்கள் என்பதை,—

"குன்றக் குறவன் கடவுட் பேணி
யிரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்" (ஐங். 25)

எனவரும் அடிகளானுணரலாம். இனித்தலைவர்கள் பொருள்வயிற் பிரிந்தகாலத்துத் தலைவியர்கள் முருகன் கோயிற்குச்சென்று முருகனை வணங்கி எம்தலைவர்கள் கருதியாங்குச் செய்பொருள் வாய்ப்பதாக; எனவேண்டிக் கொள்வார்கள். பின்னர் அம்முருகனுடைய திருவுள்ளத்தை நற்சொல் கேட்டல் பல்லியினொலி கேட்டல் முதலியவற்றானறிந்து கொள்ளச் செவிசாய்த்துக் கொண்டிருப்பார்கள் என்பதை,—

" செய்பொருள் வாய்க்கெனச் செவிசாய்ப்போரும் " (பரி. 8)

என்ற அடியுணர்த்துகின்றது. அங்ஙனமே போர்கருதிச் சென்ற தலைவர்களைப் பிரிந்த மறக்குடி மங்கையர், முருகனை வணங்கி, 'அமர் செய்யச் சென்ற எங்காதலர் பலரும் வியக்கும் வண்ணம் போர்செய்து வெல்வாராக' என்று வேண்டிக் கொள்வார்கள் என்பதை,—

" ஐயமரடுகென அருச்சிப் போரும் "

என்னுமடி யுணர்த்துதல் காண்க.

குறமகளொருத்தி தான் விரும்பிய கணவனை மணந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகனுக்குப் தேம்பலி தந்தாள் என்பதை ஒருபுலவர்,

" குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலி செய்த வீர்நறுங் கையள் " என்று

அழகுபடக் கூறியிருத்தல் காண்க. இனி பட்டினப்பாலையில்,

கிளிமழலை மென் சாய லோர்......
... ...
செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்—
வெறியாடு மகளிரொடு செறியத் தாய்க்
குழ லகவ யாழ் முரல
முழ வதிர முர சியம்ப
விழ வறு வியலாவணத்து
மையறு சிறப்பிற் றெய்வம் சேர்த்திய
மலரணி வாயிற் பலர் தொழுகொடியும் "

எனக் கூறப்பட்ட அடிகளை நோக்கின் பலவாக்கியங்களு முழங்கப் பலருந் தொழுதற்குரிய முருகன் கோயில் வாயிலில் கொடிகட்டி யிருந்தமை விளங்கும். அங்ஙனம் கொடிகட்டி விழா செய்தலுண்டென்பதினு னுணரலாம்.

முருகனை வழிபடுங்காலத்து ஆறெழுத்தாலாய மந்திரத்தை மெல்ல உச்சரித்துக் கொண்டு மலரேந்திச் சென்று அம் முருகனுக் கணிந்து வழிபடுதல் உயர்ந்தோர்கள் இயல்பு என்று தோன்றுகின்றது இதனை,

" புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்

தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கின் நவிலப்பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறை தலு முரியன்" என்ற

திருமுருகாற்றுப் படையா னுணரலாம். சிலர் உலகத்தழியும் பொருளகளை வேண்டிநிற்க, ஒரு சிலர் அவற்றையொழித்து அழியா நிலையினதாய அருள், அன்பு, அறம் என்பனவே யெமக்கு வேண்டுமென்று இறைவனை வேண்டு கின்றார்கள். இதனை,

"யாமிரப்பவை, பொருளும் பொன்னும் போகமுமல்ல—நின்பால்
அருளு மன்பு மறனு மூன்று
முருளிணர்க் கடம்பி னெலிதாரோயே" எனவரும்

பரிபாடற் பகுதியான் நன்குணரலாம். இங்ஙனம் மக்களேயன்றி முப்பெருங்கடவுளர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் பதினெண் கணங்களும் முருகனை வழிபட்டார்கள் என்பதை,—

"உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர் புகழ் மூவருந் தலைவராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவிலூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால் வேறியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற்றிரட்டி யுயர் நிலை பெறீஇயர்
... ...
... ...
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண" எனத்

திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இங்ஙனமே எட்டாவது பரிபாடலும் முப்பெருங்கடவுளர் முருகனை வணங்கு மியல்பைக் கூறுகின்றது. இவ்வாறு நந்தமிழ் மக்களிடை முருகன் வழிபாடு பல்லாற்றானும் பண்டைக்காலத்துச் சிறப்புற்றிருந்தது.

இங்ஙனம் கடவுள் வழிபாடு சிறப்புற்றிருந்த பண்டைக்காலத்தும் அறத்தைச் செய்யாதவர்களும் தவஞ் செய்யத் தொடங்கி யவஞ் செய்பவர்களும் மறுபிறப்பு இல்லை யென்ப வர்களும் இல்லாமலில்லை. என்பதை,—

"சேரா வறத்துச் சீரிலோரும்
அழிதவப் படிவத் தயரியோரும்
மறுபிறப் பில்லென்னும் மடவோரும் சேரார்
நின்னிழல்"

என்ற பரிபாடற் பகுதி யுணர்த்துதல் காண்க. இவ்வாறு சிறுபான்மை யோர் இருப்பினும் தமிழ் நாட்டில் முருகன் வழிபாடு தலைசிறந்து விளங்கிய தென்பதில் ஐயமில்லை.

திருமால்.

திருமாலை முல்லைநிலத் தெய்வமாக நம் பண்டைக்காலத் தண்டமிழ் மக்கள் கொண்டிருந்தார்கள். அத்திருமாலின் வணக்கமும் சங்க இலக்கியங்களில் பலபடியாகக் காணக் கிடக்கின்றது. திருமால், சிவந்த கண்களையும் பூவைப்பூவன்ன நீலநிறத்தையும் திருமகள் தங்கிய மார்பினையும் அம்மார்பில் அணிந்த கவுத்துவ மணியினையும் பொன்னுடையினையும் கருடக் கொடியினையும் உடையவர் என்றும், சக்கரப்படையொடு வலம்புரிச் சங்கையும் தாங்கியிருப்பார் என்றும் தமிழர் கொண்டிருந்தார்கள். இதனை,

"எரிமலர் சினைஇய கண்ணை பூவை
வரிமலர் புரையு மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி பிறங்கும் பூணினை மால்வரை
யெரிதிரிந்தன்ன பொன்புனை யுடுக்கையை
சேவலங் கொடியோய்" (பரி. 1) எனவும்

"நனந்தலையுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல்." (முல்லைப்பாட்டு)

எனவும் வரும் அடிகள் உணர்த்துகின்றன. உலகந் தோன்றுத ஆதிக் காலத்தே அஞ்சத்தக்க வெள்ளத்தின நடுவண் அயனொடு மலர்ந்த உந்தித் தாமரையை யுடையவர் திருமால் என்பதை,

"மாநில மியலா முதன்முறை யமைத்து
நாம வெள்ளத்து நடுவண் டோன்றிய
வாய் மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டு நின்னேமி நிழலே" (பரி. 3)

என்ற அடிகள் உணர்த்துதல் காண்க. திருமால் வாமன உருவங்

கொண்டு மாவலிபால் சென்று மூவடிமண் பெற்று ஞால முழுமையையும் மூன்றடியாக அளந்தார் என்ற செய்தியை,

" ஞாலமூன்றடித்தாய முதல்வன் " (கலி. 124)

என்னுமடியுணர்த்தும். திங்களைப்பற்றிய பாம்பை ஒருகாலத்து விடுவித்தான் திருமால் என்ற வரலாறு,

" பான்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்
நீனிற வண்ணனும் போன்ம் " என்ற

கலித்தொகை யடிகளானுணர்த்தப் படுகின்றது. அவன் கேசி யென்னும் பெயருடைய அரக்கனைக் கொன்றான் என்பதை,

" கூந்த லென்னும் பெயரொடு கூந்த
லெரிசினங் கொன்றாய் "

என்ற அடியானுணரலாம். இனித் தன்மாட்டன்புடைய பிரகலாதனை இரணியன் துன்புறுத்திய வழித் திருமால் நரசிங்க உருவத்தோடு தோன்றி இரணியனைக் கொன்றார் என்றசெய்தி நான்காவது பரிபாடலால் நன்கறியக் கிடக்கின்றது.

திருமால் மோகினியுருவங் கொண்டு அமிழ்து பகிர்ந்தார் என்ற வரலாற்றை,

" நகை யச்சாக நல்லமிர்து கலந்த
நடுவு நிலைதிறம்பிய நயமிலொருகை " என்ற

பரிபாடலடிகளா னறியலாம். இனித் திருமாலுக்கு உருவம் வேள்வித் தலைவன் கூறும் மந்திரம் எனவும் அவருடைய உணவு வேள்வியிற்றரும் ஆடு எனவும் அந்தணர்காணும் அவர் தோற்றம் வேள்வித் தீயென்றும் கூறப்பட்டுள்ளன. இதனை,

" கேள்வியுட் கிளந்த ஆசானுரையும்
படிநிலை வேள்வியுட் பற்றியாடு கொளலும்
புகழியைந்திசை மறை கனன்முறை மூட்டித்
திகழொளி யொண்சுடர் வளப்பாடு கொளலும்
நின்னுருபுடனுண்டி, பிற ருடம்படுவாரா
நின்னொடுபுரைய அந்தணர் காணும் வரவு "

என்ற பரிபாடற் பகுதியானுணர்க.

வெம்மை, விளக்கம், தண்மை, சாயல் (மென்மை) அருள்சுரத்தல் வண்மை, புரத்தல், பொறுமை, நாற்றம், ஒளி, தோற்றம், அகலம், உருவம், ஒலி, வருதல், ஒடுங்குதல். ஆய தன்மைகளைத் திருமால் உடையவர் என்றும், ஆயின் அவை அவர் மாட்டுளவாக எளிதிற்காண வியலர

வென்று அவற்றை யுலகப் பொருள்களிலே காண்டற் கெளிதாமாறு அவனருளால் அமைக்கப்பட்டுக் கிடக்கின்றன என்றும்தோன்றுகின்றன.

“ நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள
நின், தோற்றமும் அகலமும் நீரினுள
நின், உருவமு மொலியுமாகாயத்துள
நின், வருதலு மொடுக்கமு மருத்தினுள ” (பரி. 4)

என்ற அடிகளிற் காண்க. திருமால் எழுந்தருளியிருக்கும் இடங்களாகக் கூறப்படுவன,

“ அழல்புரை குழைகொழு நிழறரும்பலசினை
ஆலமுங் கடம்பு நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறு வேறு பெயரோய் ” என்ற

அடிகளான், ஆலமரம், கடம்பமரம், ஆற்றிடைக்குறை, குன்றம் இவை போன்ற பிற இடங்கள் என்பதை யுணரலாம். முல்லை நிலமக்கள் தாங்கள் செய்புந் தொழிலினைத் தொடங்குங்கால் முன்னர்த் திருமாலை வணங்கியே தொடங்குவார்கள். என்பதை,—

“ துறையுமாலமுந் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ ” என்ற

கலித்தொகையடிகளில் (101) ஏறுதழுவத் தொடங்கும் முல்லைநில மக்கள் திருமாலை வணங்கித் தொழுவின்கண் பாய்ந்தார்கள் என்று கூறியிருத்தலின் அறியலாம். திருமாலுறையும் இடங்களாகக் கூறப்படும் இடங்களை நோக்குமிடத்து அழகிய இனிய இடங்களிலெல்லாம் கடவுள் உறைவார் என்பதே பண்டைத்தமிழர் கொள்கையாதல் புலனாகும். முருகனுறையும் இடங்களும் இங்ஙனமே கூறப்படுதல் காண்க.

இத்திருமாலை இறையும் பிரியா நினைவினராய் அன்பர்கள், மெய்ந் நூல்களை விரித்த விமல! எங்களுடைய விரும்பத்தக்க சுற்றத்தோடு நின்னடியின்கண் உறைதல் நாள்தோறும் இயைவதாக; என நின்றுள் தொழுது இன்புறும் நெஞ்சத்தோடு பரவுகின்றேம் என்று கூறுவதை,—

“ காமரு சுற்றமொடு ஒருங்கு நின்னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென

ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழிப்புலவ நின்றாணிழல் தொழுதே'' என்ற

பரிபாடற் பகுதியானுணரலாம். இன்னுஞ் சிலர் எம்மறிவு கொடுமை யறியா தொழிவதாக என்று சுற்றத்தோடு வணங்குகின்றோம், என்று கூறுவதாகப் பிறரையும் உளப்படுத்தி யொருபுலவர்,

"கடும்பொடுங் கடும்பொடும் பரவுதும்
கொடும்பாடறியற்க வெம்மறி வெனவே'' என்று

கூறியிருத்தல் காண்க. இங்ஙனம் திருமாலின் உருவஞ் செயல்களை யுணர்ந்து முல்லைநில மக்களே யன்றி யேனையோரும் அவரை வணங்கி வந்தனர் என்க.

பலதேவன்.

இனி, இங்குக் கூறிய திருமாலின் அவதாரமென்று கூறப்படும் பலதேவன் வணக்கமும் சங்க இலக்கியங்களில் கூறப்படுவதேயாம். பலதேவன் முடிமீது ஆதிசேடன் ஆயிரம் தலையை விரித்துக்கொண்டு இருக்கின்றான் என்பதும், வெள்ளைமேனியில் நீல மலர்மாலை அணிந்துளான் என்பதும், வளைந்த கலப்பையை ஆயுதமாக வுடையவன் என்பதும், ஒரு குழை யணிந்தவன் என்பதும் பண்டைத்தமிழர் கொள்கை யென்பதை,—

"ஆயிரம் விரித்த அணங்குடை யருந்தலை
தீயுமிழ் திறனெடு முடிமிசையணவர
மாயுடை மலர்மார்பின் மையில் வால்வளை மேனிச்
சேயுயர் பணைமிசை யெழில் வேழ மேந்திய
வாய்வாங்கு வளைநாஞ்சி லொருகுழை யொருவனை''

எனவரும் பரிபாடற்பகுதி யுணர்த்துதல் காண்க. இனி, கண்ணனுக்குப் பலதேவன் மூத்தவன் என்பதை,—

"ஞால மூன்றடித்தாய முதல்வற்கு முதுமுறை
பாலன்ன மேனியான்,'' (கலி. 124)

என்றுகூறி யிருத்தலானுணர்க. இதுகாறுங் கூறிய சிவன், முருகன் திருமால், பலதேவன் என்னும் நால்வர்களே உலகிற்கு இடையூறு வாராமற் காக்கும் வலியும் புகழும் உடையவர் என்பது நம் பழந்தமிழ் மக்கள் கொள்கை யென்பதை,—

"ஏற்று வலனுயரிய எரிமருளவிர் சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
அடல் வெந்நாஞ்சில் பனைக்கொடியோனும்

மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் பொற்கொடி விறல் வெய்யோனும்
அணிமயி லுயரிய மாறு வென்றிப்
பிணிமுக வூர்தியொண் செய்யோனு மென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வர்'' எனவரும்

புறநானூற்றடிகள் நன்குணர்த்துகின்றன. இந்நால்வரைக் கூறுமிடத்தும் சிவபெருமானை முதற்கட் கூறியிருத்தல் காண்க. கடைச்சங்க காலத்துத் தமிழ்மக்கள் சிறப்பாகக் கொண்ட தெய்வங்கள் நான்கென்பதும் அத் தெய்வங்களுள்ளும் சிவபிரானுக்கே முதன்மையும் தலைமையு முண்டென் பதும் உணரத்தக்கன.

கொற்றவை.

கொற்றவை வழிபாடும் நம் பண்டைத் தமிழர்க்குரியதே யாகும். இக கொற்றவையை வணங்குபவர்கள் வீரர்களே யாவர். தமக்கு வெற்றியும் வீரமும் தருபவள் கொற்றவையே யென்பது அவ்வீரர் கொள்கை. கொற்றவையை வீரத்திற்குரிய கடவுளாகக் கொண்டமைக் கேற்ப அவளிருக்கையாகிய கட்டில் அமைக்கப்பட்டிருக்கும். அது யாங்ஙனமெனின்? தாம் போர்செய்யும் நினைவற்றவர் என்பதையுணர்த்த வேண்டி வில்லைவளைக்காது, நிமிர்த்துக்கொண்டு, தன் கோலின் கீழ்ப் படியாத வெற்றிவேந்தர்களுடைய முரசங்களை யழித்து அவ்வேந்தர்க ளுடைய பட்டத்து யானைகளின் கொம்புகளை அவ்யானைகள் வலியாற் பிளிறுமாறு அறுத்துச் செய்யப்பட்ட தெய்வத்தன்மைவாய்ந்த கட்டிலின் மேல் கொற்றவை யிருப்பாள்; என்ற கருத்தமைந்த,—

"வில்குலை யறுத்துக் கோலின் வாரா
வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்தவர்
அரசுவா வழைப்பக் கோடறுத்தியற்றிய
அணங்குடை மரபிற் கட்டின் மேலிருந்து'' (பதிற். 79)

என்ற அடிகளைக் கொண்டுணர்க. அக் கொற்றவை யுண்ணுமுணவும் வீரத்தின் மிகுதியை வெளிப்படுத்தும் இயல்பினது; என்பதை: போர் செய்தலையே தமக்கியல்பாகக் கொண்டுள்ள வீரர்கள் தங்கள் மார்பைத் திறந்து விடுங்குருதி, புறத்தில் விழுந்தாலன்றி அவர்கள் தருமுணவை யேற்றுக் கொள்ளா வியல்பினள் என்ற கருத்தமைந்த,—

"தும்பை சான்ற மெய்தயங் குயக்கத்து
நிறம்படு குருதி புறம்படினல்லது

மடையெதிர் கொள்ளா அஞ்சுவருமரபிற்
கடவுளயிரை ''

என்ற பதிற்றுப்பத்துப் பகுதியானுணரலாம். இதனுல் பண்டைக் காலத்துக் கொற்றவை வழிபாட்டினியல்பு நன்கு புலனுதல் காண்க.

திருமகள்

இனித் திருமகள் வழிபாடும் பண்டைக் காலத்திலிருந்ததெனத் தோன்றுகின்றது. என்னை? எதிரெதிருயந்த இரண்டு மலையினின்றும் வீழ்கின்ற அருவி, தன்மேல்வீழ, மலர்ந்துதோன்றும் வேங்கை மரத்திற் குவமையாக,—

"வரிநுத லெழில்வேழம் பூநீர் மேற் சொரிதரப்
புரி நெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல் வெற்ப!''

எனவரும் கலித்தொகை யடிகளில்: இருமருங்கும் இரண்டு யானைகள் பூவொடு விராய நீரை மேல் சொரியாநிற்க விரிந்த செந்தாமரை மலரின் கண் திருமகள் வீற்றிருக்கும் நிலையைக் கூறியிருத்தலினென்பது இங்ஙனம் ஓர் உருவத்தைக் கண்டன்றி யிவ்வுவமை கூற இயலாதாகலின், இங்குக் கூறப்பட்ட திருமகள் உருவவழிபாடு பண்டைக் காலத்திருந்த தென்பதைத் துணியலாம்.

காமன்.

காமனைக் கடவுளாக வணங்குதலும் அவனுக்கு வேனிற் காலத்து விழாவயர்தலும் பண்டைக்காலத் தமிழரியல்பு. அக்காமன் நிறம் கருமை யென்பதும், அவன்கொடி மீனேறு என்பதும் அலரம்புகள் ஐந்துடையா னென்பதும் அவ்வலரம்புகளால் மக்கட்குக் காமவுணர்ச்சியை யெழுப்ப வல்லானென்பதும் நம்முடைய தமிழர் கொள்கைகள்.

"மீனேற்றுக் கொடியோன் போல் மிஞிறார்க்குங் காஞ்சியும்''

என்ற கலித் தொகையடியில், கரு நிறக்காஞ்சி மலருக் குவமையாக மீனேற்றுக் கொடியோனுகிய காமனைக் கூறியிருத்தலின் காமன் கரு நிறத்தன் என்பதுணரலாம். அவன் மீனைக் கொடியாக உடையவன் என்பதை,—

"சுறு வேறெழுதிய மோதிரந் தொட்டாள்
குறியறிந் தேன் காமன் கொடியெழுதி'' என்ற

கலித்தொகை யடிகளில்: சுறுவே றெழுதிய மோதிரத்தைக் கூறுகின் றுழிக் காமன் கொடி யெழுதியதாகக் கூறியிருத்தலின் உணரலாம்.

"கவலையால் காமனும் படைவிடு வனப்பினேள்" (108. கலி)

"படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம்புகின்" (109. கலி)

"தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காம நின்னம்பு" (147. கலி)

"பணையீன்ற மாவூர்ந்தவன் வரக் காமன்
கணையிரப் பேன் கால்புல்லிக் கொண்டு" (147. கலி)

எனவருமடிகளான், காமன் அம்புகளை யுடையான் என்பதும் அவை மக்கட்குக் காமத்தை யுண்டாக்குமென்பதும் அறியப்படுதல் காண்க.

"நாமில்லாப் புலம்பாயின் நடுக்கஞ் செய் பொழுதாயின்
காமவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதென—
... ...
... ... துணை தந்தார் விரைந்தே" (26. கலி)

என்ற அடிகளில்: தலைவன், 'பிரிந்தார்க்கு நடுக்கஞ்செய்யும் வேனிற் காலத்துக் காமவேள்விழா நடைபெறுமாயின் நாமில்லாது தனிமையுற்ற தலைவி பெரிதும் நடுங்குவாள்;' என்று விரைந்து வந்தான்; என்று கூறி யிருத்தல் காண்க. இதனால் பண்டைக்காலத்துக் காமவேள் விழா நடை பெறுதலும், அவ்விழவில் காதலர் பிரியாமலிருக்குமியல்பினர் என்பதும் பெறப்படுதல் காண்க.

"உறலியா மொளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரொடு விளையாடுவான் மன்னோ" (கலி. 29)

"மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ" (கலி. 34)

எனவருமடிகளில்: 'உயர்ந்தவன் விழவு' 'வில்லவன் விழவு' என்பன காம வேள்விழவே யாகும். விழாக்காலத்துக் காதலர் பிரியாது நின்று ஆற்றிடைக் குறைக்கண் விளையாடுவார்கள் என்பதும் இவ்வடிகளானே யுணரப்படும்.

ஆதிசேடன்.

ஆதிசேடன் வணக்கமும் பண்டைக்காலத்துண்டு. திருமால் கடல் கடைந்த ஞான்று நாணாக இருந்தான் என்பது ஆதிசேடனுக்கோர் சிறப்பு. மலையொடு கூடிய மாபெரும் பூமியைத் தாங்கிக் கொண் டிருப்பவன் ஆதிசேடனே எனத் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பதை,—

" மணிபுரை மாமலை ஞாறிய ஞாலம்
அணிபோற் பொறுத்தா ருந்தாம்" எனவரும்

பரிபாடற்றிரட்டா னுணரலாம். சிவபிரான் திரிபுரமெரித்தகாலத்து இமைய வில்லிற்கு நாணாக இருந்தவன் ஆதிசேடன் என்பதை,—

" செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்லுயர் சென்னி யிமையவில் நாணாகித்
தொல்புகழ் தந்தாருந் தாம்." என்ற

பரிபாடற்றிரட்டானு ணரலாம். இவ்வாதிசேடனுக்குக் கோயில் அமைத் திருந்தார்கள் என்றும் அக்கோயில் துறக்கத்தை நிகர்க்குமென்றும் கீழ் வரும் அடிகளுணர்த்துகின்றன.

" துளங்கா விழுச்சீர் துறக்கம் புரையும்
... ...
இரு கேழுத்தி யணிந்த வெருத்தின்
வரை கெழு செல்வனகர்." எனல் காண்க

அவ்வாதிசேடனை மக்கள் வணங்கி வந்தார்கள். என்பதை,—

" அணங்குடை யருந்தலை யாயிரம் விரித்த
கணங் கொள் சுற்றத் தண்ணலை வணங்கி
நல்லடி யேத்தி நிற்பாவுதும்." எனவரும்

பரிபாடற்றிரட் டுணர்த்துகின்றது.

ஞாயிறு.

உலகத்துக் கண்முன்காணும் கடவுளாகிய ஞாயிற்றை வணங்குதல் பண்டைத் தமிழர் கொண்ட வழக்கமெனக் காணப்படுகின்றது. இரு ளகற்றிப் பொருள்களை விளக்கி யுணவுப் பொருள்களையும் உண்டாக்கித் தருகின்ற ஞாயிற்றை வணங்குதல் இன்றியமையாததன்றோ?

" முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடரினும்" எனவரும்

நற்றிணையடிகளான் (283) ஞாயிறு கடலின்கண்ணே தோன்றுங்கால் பலருந் தொழுவார்கள் என்பது போதருதல் காண்க. இச் செஞ் ஞாயிற்றுக்குத் தேர் ஒன்றுள தென்பதும் அத்தேரில் குதிரைகள் பூட் டப்பட்டிருக்கும் என்பதும் அக்குதிரைகள் ஓய்வின்றிச் செல்லும் இயல் பின வென்பதும் பண்டையோர் கொள்கையாகத் தோன்றுகின்றது.

" தொல்லிசைத் தொழில் மாக்கள்
காய்சினத்த கதிர்ச் செல்வன்

தேர்பூண்ட மா போல
வைகறுறு மசை வின்றி " எனவரும்

பட்டினப்பாலைப் பகுதியில் நாடொறும் அசைவின்றித் தொழில் செய்யு மாக்களுக் குவமையாகக் கதிர்ச் செல்வன் தேர்பூண்ட குதிரைகளைக் கூறி யிருத்தல் காண்க.

திங்கள்.

பிறைத்திங்கள் வணக்கம் பண்டைக்காலத் தண்டமிழ்ப் பெண்டி ரிடத்திருந்து வந்தது. அவர்கள் பிறையை வணங்குவது, மணஞ்செய்து கொள்ளுவதற்கு முன்பேயாகும். மணஞ்செய்து கொண்டபின்னர் அல் லது ஒருகாதலனை உள்ளத்தில் தலைவனாகக் கொண்ட பின்னர் பிறையைத் தொழுதலில்லை. தலைவி ஒரு தலைவனைக் காதலித்துள்ளாள் என்பதைப் பிறை தொழாமை கொண்டும் உணர்வதுண்டு.

" ஒள்ளிழைமகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென்மாலை." (அகநா. 239) எனவும்,

" பலர் தொழச், செய்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே." (குறுந். 307)

எனவும் வருமடிகளில் தமிழ்மகளிர் பிறைத் திங்கள் வழிபாட்டை யுணரலாம்.

இல்லுறை கடவுள்.

இல்லுறை கடவுள் என்று சொல்லப்படுந் தெய்வத்தைத் தமிழர் வணங்கி வரம்பெறுதலும் பண்டைக்காலத்துண்டு. அத் தெய்வத்திற் குணவு படைத்து வணங்கித் தாம்கருதியதை முடிப்பது தமிழர் வழக்கம்.

" யாமும், வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கடப்பி
இல்லுறை கடவுட்காக்குதும் பலியே" (அகநா. 282)

என்ற அடிகளில் மணந்து கொள்ளுநாள் விரைவில் வருவதாக என வேண்டிக் கொண்டு இல்லுறை கடவுட்குப் பலி கொடுப்போம் என்று கூறியதன்மை விளங்குதல் காண்க. பலியென்றது ஈண்டு தெய்வத்திற்குப் படைக்கு முணவை.

நடுகல்.

வீரர்களாயிருந்து இறந்தவர்களை நடுகல்லில் வைத்து வணங்குதல் பண்டைக்கால மரபு.

" நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவினல்லிசை சூடி
நடுகலாயினன் புரவல னெனவே." (புற. 221)

"செல்லுந் தேஎத்துப் பெயர் மருங்கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரைமரா அத்த
